In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு

அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில்

கல்வெட்டுக்கள்

பதிப்பாசிரியர்

கோ. விசயவேணுகோபால்

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி.

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME - ORIENT

(French School of Asian Studies) Centre de Pondichéry

கோயில் மூன்றாவது கோபுர நுழைவு வாயிலின் மேலே உள்ள சுதைச்சிற்பம்



விஷ்ணு அனந்த சயனம் மார்பில் ஸ்ரீ தியாகராஜர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு
அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில்

கல்வெட்டுக்கள்





கல்வெட்டுக்களை மீண்டும் படியெடுத்து
வாசித்துப் பதிப்பித்தவர்

கோ. விசயவேணுகோபால்

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி.

ÉCOLE FRANÇAISE D'EXTRÊME - ORIENT
(French School of Asian Studies) Centre de Pondichéry

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கம்

நூலின் பெயர் : திருநள்ளாறு
அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில்
கல்வெட்டுக்கள்

ஆசிரியர் : **கோ. விசயவேணுகோபால்**
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி
புதுச்சேரி.

உரிமை : அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில் தேவஸ்தானம்
திருநள்ளாறு, காரைக்கால் மாவட்டம், புதுச்சேரி மாநிலம்.

முதற்பதிப்பு : 2017

பக்கங்கள் : 144

நூலின் அளவு : 1/4 டெம்மி

விலை :

அச்சிட்டோர் : அன்னை அருள் மறுதோன்றி அச்சகம்
(MOTHER'S GRACE OFFSET)
புதுச்சேரி - 605 001.
பேசி : 0413 - 2336204 - 05
mothergraceoffset@gmail.com

அட்டைப்படம் - தருப்பைப் புல், தல மரம் (கோ. விசயவேணுகோபால்)
வடக்கு, திருச்சுற்று

அட்டை உள் பக்கம் - விஷ்ணு அனந்த சயனம்-மார்பில் ஸ்ரீ தியாகராஜர் (பாபு (எ) நா. இராமசாமி)

பின் அட்டை - அருள்மிகு தட்சிணாமுர்த்தி (கோ. விசயவேணுகோபால்)
அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் கருவறை தெற்குச் சுவர்

பின் அட்டை உள் பக்கம் - அருள்மிகு நீலோத்பலாம்பிகை (பாபு (எ) நா. இராமசாமி)
ஸ்ரீ தியாகராஜர் கருவறை அருகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு
அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில்

பொருளடக்கம்

1.	மாண்புமிகு கல்வி அமைச்சர் இரா. கமலக்கண்ணன் (வாழ்த்துரை)	1
2.	திரு. இர. கேசவன், மாவட்ட ஆட்சியர், காரைக்கால் (வாழ்த்துரை)	3
3.	திரு. கே.ஆர். பன்னீர்செல்வம், செயல் அலுவலர், திருநள்ளாறு தேவஸ்தானம் (வாழ்த்துரை)	5
4.	பதிப்பாசிரியர் நன்றியுரை	6
5.	பதிப்பாசிரியர் பதிப்புரை	8
6.	கல்வெட்டுக்களின் புகைப்படங்களும் வாசகங்களும்	13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

R. Kamalakkannan
Minister for Agriculture, Electricity,
Education including Collegiate Education,
DRDA, Community Development,
Fire Services and Sainik Welfare
Government of Puducherry

सत्यमेव जयते

Puducherry
Date : 23-10-2017

வாழ்த்துரை

காலம் கடந்து, கலை மற்றும் வரலாற்றுச் சின்னங்களாகவும், பாரம்பரியச் செல்வமாகவும் நிலைத்து நிற்கும் நமது ஆலயங்கள் போற்றிப் பாதுகாக்கப் படவேண்டிய பொக்கிஷங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அவற்றை உருவாக்கியது மட்டுமின்றி, பராமரிக்கவும், அக்காலத்து மன்னர்களும், செல்வந்தர்களும் செய்து வைத்துள்ள ஏற்பாடுகள் மூலம்தான், அவை இன்று நம்மிடம் வந்து சேர்ந்துள்ளன.

இந்த உண்மைகளை, கல்வெட்டுக்களிலும், ஏடுகளிலும், இலக்கியங்களிலும் பதிவு செய்து பராமரித்திராவிட்டால், இவற்றைப் பற்றி நாம் அறியவோ, பெருமைப்படவோ முடியாது என்பது உண்மை.

இத்தகைய கலை, ஆன்மீகச் செல்வங்களைக் காலத்தால் அழியாத பதிவுகளாக மாற்ற வேண்டும் என்று நான் அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். என் எண்ணத்தின் வெளிப்பாடாகப் புதுவைப் பகுதியில் அதிகக் கல்வெட்டுக்களைக் கொண்டுள்ள திருநள்ளாறு அருள்மிகு தர்ப்பாரண்யேச்வர சுவாமி திருக்கோவில் கல்வெட்டுக்கள் படம் எடுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, நூல் வடிவில் வெளி வருவதைப் பெரிதும் பாராட்டி மகிழ்கிறேன்.

இக் கல்வெட்டுக்களில் இக் கோவிலின் நிர்வாக நெறிமுறைகள் தெளிவாகத் தெரிய வருகின்றன. ஏனைய திருக்கோவில்களின் நிலங்களைப் பயிரிட்டுக் கோவில் பணி செய்வோருக்கும் இக்கோவிலின் நிலங்களைப் பயிரிட்டு வரும் பூர்வ குடியினருக்குமான உரிமைகள் வித்தியாசமானவை. அவற்றை இக்கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன.

இதனையே ஆவணமாகக் கொண்டு அவர்களுக்குரிய உரிமைகளை நிலை நிறுத்திட அரசு ஆவன செய்தல் வேண்டும் என்பது என் விருப்பம்.

அனைத்து ஆலயங்களிலும் உள்ள தெய்வச்சிலைகள், கட்டிடக்கலைச் சிறப்புக்கள், உலோகச் சிலைகள், வாகனங்கள், தல விருட்சங்கள், பாடல்கள், தலவரலாறுகள், திருவிழாக்கள், சிறப்பு வழிபாடுகள் ஆகிய அனைத்தையும் முறைப்படி ஆவணப்படுத்த வேண்டும் என்பதே எனது அவா.

இந்தத் திருநள்ளாறு திருக்கோவில் கல்வெட்டுக்கள் புத்தகம் வெளிவர முக்கிய காரண கர்த்தாவாகிய, புதுச்சேரி பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப்பள்ளி, பேராசிரியர் திரு கோ. விசயவேணுகோபால் அவர்களுக்கும் மற்றும் திருநள்ளாறு தேவஸ்தானத்திற்கும் என் பாராட்டுக்கள்.

இரா. கமலக்கண்ணன்
விவசாயத்துறை அமைச்சர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

R. Kesavan, I.A.S.
COLLECTOR - cum - DISTRICT MAGISTRATE
KARAIKAL

सत्यमेव जयते
Government of Puducherry

Government House
Karaikal - 609 602

வாழ்த்துரை

எழுதப்பட்ட வரலாறு எல்லாம் இன்னும் முற்றுப் பெறாதவைகள்தாம். வரலாறு முன்முடிவுகளுக்குள் இறுகிப்போகாமல் தொடர்ந்து மறுபார்வை செய்யப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. இந்தத் தொடர்ச்சி நிகழ வேண்டுமெனில், இன்னும் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கும் கல்வெட்டுக்களையும், ஓலைச்சுவடிகளையும், வழக்காறுகளையும் தொகுக்க வேண்டிய அவசியம் உள்ளதாக நம்புகிறேன்.

கல்வெட்டுக்களை இன்றும் தாங்கி நிற்பவை கோவில்களே. புதுச்சேரி மாநிலத்தில் உள்ள கோவில்களிலும் எண்ணற்ற கல்வெட்டுக்கள் உள்ளன. பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் விஜயவேணுகோபால் அவர்களின் முயற்சியால் புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு நூலாக வெளியானது. ஆயினும் இதில் கல்வெட்டுக்களின் படி/பிரதி (copy) இணைக்கப்படவில்லை.

திருநள்ளாறு ஆலய ஆர்வலர் திரு. மகாதேவன் மற்றும் தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. எஸ்.கே. பன்னீர்செல்வம் இருவரும் இணைந்து, பேராசிரியர் விஜய வேணுகோபால் அவர்களின் உதவியுடன், புதுவை மாநிலத்தில் மிக அதிக அளவிலான கல்வெட்டுக்கள் கொண்டுள்ள திருநள்ளாறு அருள்மிகு தர்ப்பாரண்யஈஸ்வரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்கள் அனைத்தையும் புகைப்படமெடுத்துத் தனியாகப் புத்தகமாக வெளியிட மேற்கொண்ட முயற்சியினால்தான் இது சாத்தியமானது.

கல்வெட்டுக்களையும், மெய்க்கீர்த்திகளையும் ஆவணப்படுத்துவதன் பயன் வெறும் வரலாற்றை எழுதிவைப்பது மட்டுமல்ல, கோயில் நிருவாகம் குறித்து அறிந்து கொள்ளவும் கோயில் நிலங்கள் எவ்வாறு நிருவகிக்கப்பட்டன என்பது குறித்த புரிதல் ஏற்படவும் உதவியாக இருக்கும் என்பதும்தான்.

மேலும் கோவிலில் நிகழ்ந்த பல்வேறு விழாக்கள் குறித்த செய்திகள், சமூகவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுக்குப் பயன்படக்கூடியவை. குறிப்பாகக் கோயிலின் கருவறை வடக்குச்சுவரில் உள்ள கல்வெட்டு மாசித்திருநாள் புறப்பாடு குறித்தும் அதை நடத்துவதற்கு எத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டது என்பது குறித்தும் குறிப்பிடுகிறது. இராசஇராச வளநாட்டு மருகல் நாட்டு இடையாற்றுக்குடிச் சபையார் மாசித்திருநாளின்போது நடராசப்பெருமான் திருவுலாச் செய்ய ஏற்படும் செலவுகளுக்கு வரியேதுமின்றி நிலம் அளித்தமை குறிப்பிடப்படுகிறது.

80 என்பது எண்பது என எழுத்தாலும் "அ0" என எண்ணாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே "0" என்பதை எண்ணால் குறிப்பிடும் முதல் தமிழ்ச்சான்று எனக் கல்வெட்டு நிபுணர்கள் கருதுகின்றனர்.

திருநள்ளாறு ஆலயத்தில் மறைந்திருந்த கல்வெட்டுக்களைப் புகைப்படங்களுடன், நூல் வடிவத்தில் கொண்டுவரும் இந்த அரிய முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இர. கேசவன், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர் மற்றும் தனி அதிகாரி
அருள்மிகு தர்பாரண்ய ஈஸ்வரர் தேவஸ்தானம், திருநள்ளாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

S.K. பன்னீர்செல்வம்

நிர்வாக அதிகாரி (கோயில்கள்)

ஸ்ரீ தர்ப்பரண்யேச்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு

ஸ்ரீ தர்ப்பரண்யேச்வர சுவாமி தேவஸ்தானத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றது முதல் இந்தப் பிரசித்தி பெற்ற ஆலயத்தின் சிறப்புக்களை நிரந்தரமாக்கும் பொருட்டு நூல்கள் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொண்டு நகவிடங்க தியாராஜர், முசுகுந்த சகஸ்ரநாமம் விளக்கம், நளச்சக்கரவர்த்தி வரலாறு போன்ற நூல்களை வெளிக் கொணர்ந்தோம். அது மட்டுமன்றி சனிபகவான் மகிமை மற்றும் திருநள்ளாறு ஆலய வரலாறு பற்றித் தமிழ், ஆங்கிலம், இந்தி, மற்றும் கன்னடத்திலும் நூல்கள் வெளிவந்தன.

திருநள்ளாறு தர்ப்பாரண்யேச்வர சுவாமி ஆலயத்தில் ஏராளமான கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. காலப் போக்கில் பராமரிப்பின்றி அவை சிதைந்து போகும் ஆபத்தை உணர்ந்து அவற்றை அப்படியே புகைப்படம் எடுத்து விளக்கத்துடன் வெளியிட ஆர்வம் கொண்ட போது அதற்கான ஊக்கத்தையும் ஆர்வத்தையும் முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு. P. பார்த்திபன், I.A.S., தற்போதைய ஆட்சியர் திரு. R. கேசவன், I.A.S., கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு. மங்கலாட் தினோஷ் அவர்களும் தந்தனர்.

இவ்வாலயத்தின் வளர்ச்சியில் பேரார்வம் கொண்ட திரு.மகாதேவன் எனக்கு இந்த முயற்சிகளில் எல்லாம் ஊக்கமாக இருந்ததை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய உதவியுடன் பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வகப் பேராசிரியர் கோ. விஜயவேணுகோபால் அவர்கள் மூலம் இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களைப் புகைப்படத்துடன் படி எடுக்கவும் விளக்கம் எழுதவும் செய்தேன். அந்தக் கல் வெட்டுக்களின் மூலம் விளக்கம் கொண்ட நூலை வெளியிட எனக்கு அனுமதியும் தொழில்நுட்பக் கலாசார உதவிகளையும் தந்து ஒத்துழைத்த பேராசிரியர் கோ. விஜயவேணுகோபால் அவர்களுக்கும் மற்றும் அவரைச் சேர்ந்த பாபு என்கிற நா. இராமசாமி அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

புதுவைப் பகுதியில் கல்வெட்டுக்கள் நிறைந்த ஆலயம் ஸ்ரீ தர்ப்பாரண்யேச்வர சுவாமி தேவஸ்தானம் என்பதிலும் இந்தக் கல்வெட்டுக்களை முதன் முறையாகப் புகைப்படத்தோடு கூடிய நூல் வடிவில் கொண்டுவரும் முதல் தேவஸ்தானம் என்ற பெருமை அடைகிறது என்பதிலும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த மகத்தான பணியில் எனக்கு உதவிய அனைத்து அன்பர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

S.K. பன்னீர்செல்வம், *நிர்வாக அதிகாரி*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றியுரை

திருநள்ளாறு அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள் அனைத்தும் புதுச்சேரி, பிரஞ்சு ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தால் ஏற்கனவே 2004 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் திருநள்ளாறு, அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் கோயில் செயல் அலுவலர் திரு. எஸ். கே. பன்னீர்செல்வம் அவர்கள் இக்கல்வெட்டுக்கள் இயற்கை நிகழ்வுகளால் அழிந்து போகும் நிலை உள்ளமையின் இவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் இவற்றைப் புகைப்படம் எடுத்து அதனோடு கல்வெட்டு வாசகங்களையும் ஒருசேர வெளியிட விரும்புவதாகவும் இம்முயற்சிக்குப் புதுச்சேரி, பிரஞ்சு ஆசியவியல் ஆய்வு நிறுவனம் உதவி செய்யவேண்டுமெனவும் எங்கள் நிறுவன இயக்குநர் திரு. டொமினிக் குடால் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவர் இதனை ஏற்றுக் கொண்டதோடு இம்முயற்சியில் ஈடுபடுமாறு என்னையும் என்னுடன் பணிபுரியும் திரு. பாபு அவர்களையும் பணித்தார்கள். தமிழ்க் கல்வெட்டுக்களைக் கண்டறிவதிலும் அவற்றை வெளிப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்ட எனக்கு இது நல்வாய்ப்பாக அமைந்தது. எனவே முதற் கண் திரு. டொமினிக் குடால் அவர்களுக்கும் செயல் அலுவலர் திரு. எஸ். கே. பன்னீர் செல்வம் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முடிவினைக் கோயில் செயல் அலுவலருக்குத் தெரிவித்ததும் உடனடியாகச் செயற்பட்டுக் கோயிலில் அனைத்து ஊழியர்களுக்கும் கட்டளை பிறப்பித்துக் கல்வெட்டுக்களைப் புகைப்படம் எடுப்பதிலும் கல்வெட்டுக்களைப் படியெடுப்பதிலும் எங்களுக்கு எல்லா வகையான ஒத்துழைப்பினையும் தந்து ஊக்குவித்தார்கள். இவரைப் போலவே எல்லாக் கோயில் அலுவலர்களும் இருந்துவிட்டால் கோயிலில் அழிந்து வரும் கல்வெட்டுக்கள் முதலானவற்றை எளிதில் காப்பாற்றி விடலாம். இதனால் தமிழர் தம் பண்பாடு முதலானவற்றை விளக்கி நிற்கும் ஆவணங்கள் பாதுகாக்கப்படும். செயல் அலுவலரைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் சுருக்கமாகப் பத்தரைமாற்றுத் தங்கம் எனவே சொல்லி விடலாம். பணியில் முழுவதுமான ஈடுபாடு, நேர்மை, பழகுதலில் இனிமை, உதவி செய்தலில் உளமார்ந்த ஈடுபாடு இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எங்களுக்கு உணவு, உறைவிடம், போக்குவரத்து என அனைத்தையும் அளித்து எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த திரு எஸ். கே. பன்னீர்செல்வம் அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி என்றும் உரியது. இம்முயற்சியில் ஆர்வமும் இடையறா முயற்சியும் மேற்கொண்ட மற்றோர் அன்பர் பற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன். இவரது அயராத முயற்சியும் இடைவிடாத ஆர்வமும் இல்லையென்றால் இப்பதிப்பு நிகழ்ந்திருக்கவே இருக்காது. அவர் திருநள்ளாற்றைச் சேர்ந்த பெரியவர் திரு. மகாதேவன் அவர்கள். பிரஞ்சு அரசின் போது அரசுப் பணியில் இருந்தவர். எந்நேரமும் திருநள்ளாற்றுத் திருக்கோயிலில் இவரது குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும். திருநள்ளாற்று இறைவன்பால் உண்மையான பற்றும் பத்திமையும் உள்ளவர். இப்பதிப்புப் பணியில் எனக்கும் செயல் அலுவலர்க்கும் பாலமாக இருந்து உதவிய பெருமகனார். உண்மையில் இம்மகாதேவர் வழியாகவே திருநள்ளாற்று மகாதேவர் தம் பணியினை முடித்துக் கொண்டாரென்றே சொல்லிவிடலாம். இவரைத் "திருநள்ளாறு திருத்தொண்டன்" என்றே அழைக்க விரும்புகிறேன். இவரது அன்பிற்கும் வாஞ்சைக்கும் அளவே இல்லை. இவர் என் நெஞ்சில் என்றும் நிறைந்திருப்பார். இவருக்கு நன்றி கூறுதல் வெறும் மரபே.

அடுத்து எனக்கு உறுதுணையாக இருந்து என்னைத் திருநள்ளாற்றுக்கும் புதுவைக்கும் பல முறை சிற்றுந்தில் ஏற்றிச் சென்றதோடு கல்வெட்டுக்களை மசி பூசுதல் பின்பு அவற்றைப் புகைப்படம் எடுத்தல், பின்னர் அவற்றைக் கணினியில் ஏற்றல், அச்சுக்குப் பிரதிகள் செய்து தரல் என அனைத்துப் பணிகளையும் முகக்கோணல் ஏதுமின்றி மகிழ்ச்சியோடு செய்து கொடுத்தவர் என் குடும்பத்தில் ஒருவராகிவிட்ட அருமை நண்பர் திரு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாபு (எ) நா. இராமசாமி. அவருக்கு என் மனமார்ந்த நன்றிகளும் ஆசிகளும்.

திருநள்ளாற்றுக் கல்வெட்டுக்களைப் புகைப்படங்களோடு நூலாக வெளியிடும் கருத்துத் தோன்றியதும் இதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும் என்பது முறைமையாகலின் செயல் அலுவலர் திரு. கே.எஸ். பன்னீர் செல்வம் அவர்களும் நானும் காரைக்கால் சென்று மாவட்ட ஆட்சியர் அவர்களை அணுகினோம். மாவட்ட ஆட்சியர் மதிப்புக்குரிய திரு. ஆர். கேசவன் அவர்கள் எங்களைக் கண்டதும் மனமகிழ்ச்சியோடு வரவேற்றதுடன் எங்கள் முயற்சிக்கு மகிழ்வோடு ஒப்புதல் அளித்தார்கள். மேலும் இதனை விரைவில் செய்து முடியுங்கள் எனப் பணித்து வாழ்த்தி அனுப்பினார். திக்கெட்டும் புகழ் மணக்கும் தென்பாண்டிச் சீமையைச் சேர்ந்த, தமிழின்பாலும் தமிழ்ப் பண்பாட்டின்பாலும் மிக்க மதிப்புடைய அவர் உடனடியாக ஏற்புத் தெரிவித்ததில் வியப்பேதுமில்லை. என்னை மதுரைப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்த அக்காலத்திலேயே தெரியும் என்று அவர் கூறிய போது எனக்கு மேலும் வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட்டது. பண்பு நலம் சான்ற ஆட்சியருக்கு என் உளமார்ந்த நன்றியும் பாராட்டும்.

இந்நன் முயற்சியைத் திருநள்ளாற்றுப் பெருமக்களும் ஏனைய தமிழ் மக்களும் விரும்பி வரவேற்பர் எனக் கருதுகின்றேன்.

கோ. விசயவேணுகோபால்

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி.

புதுச்சேரி. 23-10-2017

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோ. விசயவேணுகோபால்

முதுநிலை ஆய்வாளர்

பிரஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி

பதிப்புரை

புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து ஒரு தொகுதியாக 2004 இல் தமிழிலும் 2010 இல் ஆங்கிலத்திலும் வெளிவந்தன. இவற்றுள் திருநள்ளாற்றுத் தர்ப்பாரண்யேச்வரர் கோயில் கல்வெட்டுக்கள் 51ம் அடங்கும். (புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் - தொகுதி 1 : எண்கள் 451 முதல் 501 வரை) இந்நிலையில் கடந்த 2016ஆம் ஆண்டு சூன் மாதம் 27ம் தேதியிட்ட கடிதத்தில் திருநள்ளாறு, அருள்மிகு தர்ப்பாரண்யேச்வரர் திருக் கோயில் செயல் அலுவலர் அவர்கள் எங்கள் நிறுவன இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் தங்கள் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களைப் பதிப்பித்தமைக்கு நன்றி தெரிவித்ததோடு தங்கள் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களைக் காலப் போக்கில் இயற்கை நிகழ்வுகளால் அழிந்து போக விடாது அவற்றைப் புகைப்படங்களோடும் கல்வெட்டு வாசகங்களோடும் தாங்களே பதிப்பிக்க விரும்புவதாகவும் இம்முயற்சிக்கு உதவி செய்ய வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்கு எங்கள் நிறுவன இயக்குநர் திரு டொமினிக் குடால் அவர்கள் இசைவு தெரிவித்ததோடு என்னையும் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் திரு பாபு அவர்களையும் இப்பணியில் ஈடுபடுமாறு பணித்தார்கள். நாங்களும் நான்கு முறைகள் திருநள்ளாற்றுக்குச் சென்று கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுக்களையும் புகைப்படம் எடுத்தோம். இச் செயலில் ஈடுபட்டிருந்த காலையில் புதியனவாகச் சில கல்வெட்டுக்கள் உள்ளமையையும் நான் கண்டறிந்தேன். இவற்றோடு ஏற்கனவே பதிப்பித்த கல்வெட்டு வாசகங்களில் சில விடுபாடுகளும் மாற்றங்களும் இருப்பதையும் கண்டறிந்தேன். தற்போது இவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுப் புதிய பதிப்பாக இப்போது வெளியிடப்படுகின்றன.

பதிப்பில் முதலில் திருநள்ளாற்றுக் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களால் அறியலாகும் செய்திகள் சுருக்கமாக, பொதுமக்களுக்குப் புரியும் வகையில் விளக்கப்பட்டுள்ளன. இதன் பின்பு நூலின் இடது புறம் (பெரும்பாலும்) கல்வெட்டின் புகைப்படம், வலது புறம் கல்வெட்டு காணப்படும் இடம், கல்வெட்டு எவ்வரசனின் காலத்தது, கல்வெட்டு ஏற்கனவே வெளியிடப் பட்டிருப்பின் அவ்விவரங்கள், கல்வெட்டு என்ன செய்தியைக் குறிப்பிடுகிறது, இவற்றின் பின் கல்வெட்டு வாசகம் என இம்முறையில் தரப்பட்டுள்ளன. கல்வெட்டு வாசகங்கள் எம்முறையில் வெட்டப்பட்டுள்ளனவோ அம்முறையிலேயே எண்ணிடப்பட்டு பதிப்பிக்கப் பட்டுள்ளன. மொழி ஆய்வு செய்வோர்க்குப் பயன்படுமாதலின் கல் வெட்டில் பிழைகள் காணப்படினும் கல் வெட்டில் எவ்வாறு அவை உள்ளனவோ அவ்வாறே பதிப்பிக்கப் பட்டுள்ளன. கோயிலுக்கு வழிபாட்டிற்கு வரும் பொது மக்களும் பிறரும் கல்வெட்டுக்கள் பற்றிய பொதுவானதோர் அறிவை இதன்வழிப் பெறுவர் என நம்புகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறு திருக்கோயில் கல்வெட்டுக்கள் வழி அறியலாகும் செய்திகள்

இறைவனின் பெயர்

திருநள்ளாற்று இறைவன் எல்லாக் கல்வெட்டுக்களிலும் உடையார் திருநள்ளாறுடையார் எனவே குறிப்பிடப் பட்டுள்ளார். இது போலவே திருநள்ளாற்று இறைவி போகமார்த்த பூண்முலையாள் என அழைக்கப்பட்டுள்ளாள். இப்பெயர் தேவாரத்தில் வழங்கிய பெயராகும். எனவே திருநள்ளாற்றின் உரிமையாளர் என்ற பொருளில் திருநள்ளாறு உடையார் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

ஊரின் பெயர்

ஊர்ப் பெயர் அக்கால வழக்கின்படி உய்யக் கொண்டார் வள நாட்டு முழையூர் நாட்டுப் ப்ரஹ்ம தேசம் திருநள்ளாறு எனக் குறிக்கப்படுகிறது. வளநாடு, நாடு, ஊர் என்பன முறையே இன்றைய மாவட்டம், வட்டம், ஊர் என்பனவற்றிற்கு இணையானவை. ப்ரஹ்ம தேசம் என்பது பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட ஊர் என்பதைக் குறிக்கும் வட சொல். எனவே தொடக்கத்தில் இவ்வூர் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட ஊராகும். எனினும் திருநள்ளாறு என்ற ஊர்ப் பெயரின் காரணம் தெளிவாக இல்லை. நள்ளாறு எனும் ஆற்றின் அருகில் அமைந்த ஊராகலின் நள்ளாறு எனக் குறிப்பிட்டிருக்கலாம். திருவையாறு போன்ற ஊர்களின் பெயர்களைக் காண்க. நள் என்பது பழந்தமிழில் செறிவு என்ற பொருளைத் தரும். எனவே செறிந்த நீர்ப் பெருக்கம் மிக்க ஆறு என்ற பொருளில் நள்ளாறு எனப் பட்டது. பெரும்பாலும் ஆற்றின் கரைகளில் ஊர்கள் அமைவது மரபு, கோயில் ஏற்பட்ட பின்பு திரு என்ற அடைமொழியைச் சேர்த்துத் திருநள்ளாறு என வழங்கியிருக்கலாம்.

பெயர் மாற்றம்

இவ்வூர்ப் பெயர் சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தே (கி. பி. 1135இல்) விருதராஜபயங்கரச் சதுர்வேதி மங்கலம் என மாற்றப்பட்டுள்ளது. (கல்வெட்டு எண் 22) திருநள்ளாறான விருதராஜபயங்கரச் சதுர்வேதி மங்கலம் எனக் குறிப்பிடுதல் காண்க. சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் நான்கு வேதங்களில் வல்ல பிராமணர்களுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட மங்கலம் பொருந்திய ஊர் என்பதைக் குறிக்கும். விருதராஜன் என்பது சோழனது பட்டப் பெயர்களுள் ஒன்று. இப் பெயர் மாற்றம் ஏன் செய்யப்பட்டது என்பதை மேலும் ஆராய வேண்டும். இடையில் இப்படிப் பெயர் மாற்றம் பெற்றாலும் பிற்காலத்தே இது திருநள்ளாறு எனவே மீண்டும் வழங்கப்பட்டமை எஞ்சிய கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம்.

வள நாடு மாறுதல்

ஊர்ப்பெயர் மாற்றத்தைப் போலவே வளநாட்டுப் பிரிவும் மாறுதலமைந்துள்ளது. பெரும்பாலான கல்வெட்டுக்கள் இவ்வூர் இருந்த வளநாடு உய்யக்கொண்டார் வளநாடு எனக் குறிப்பிட்டாலும் இடையில் இரண்டு முறை இவ்வள நாடுகள் மாறியுள்ளன. அவை முறையே ஜயங்கொண்ட சோழவளநாடு (கல்வெட்டுக்கள் 5, 6, 7, 9, 22) ராஜ நாராயண வளநாடு என அழைக்கப்பட்டன. (கல்வெட்டுக்கள் 10, 11, 12, 13, 19). ஊர்ப் பெயர் போலவே வளநாடு இடையில் மாறினாலும் மீண்டும் உய்யக்கொண்டார் வளநாட்டுக்குள் திருநள்ளாறு வந்துவிடுகிறது.

நாட்டுப் பெயரில் மாற்றம் இல்லை

திருநள்ளாறு ஊர் அடங்கிய வளநாடு பெயர் மாற்றம் பெற்றாலும் நாடு முழையூர் நாடெனவே எல்லாக் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்படுகிறது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

பிரம்ம தேசம் என்ற நிலை மாறுதல்

திருநள்ளாறு ஒரு பிரம்ம தேசம் எனக் குறிப்பிட்டோம். இந்தப் பிரம்ம தேசம் என்ற நிலை மாற்றப்பட்டு கி.பி.1135 இல் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தே விருதராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டுள்ளது. சதுர்வேதி மங்கலம் என்பதும் பிராமணர் குடியிருப்பைக் குறிக்குமாயினும் ஏன் இம்மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான காரணம் விளங்கவில்லை. இங்கு வாழ்ந்த பிராமணர் வெளியேறிப் புதிய பிராமணர்கள் குடியமர்த்தப்பட்டார்களா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊர் நிர்வாகம்

திருநள்ளாறு, பிரம்ம தேசம்/சதுர்வேதிமங்கலம் என்ற நிலையில் பிராமணர் வாழும் பகுதி ஸபை என்ற அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டது. பிற மக்கள் வாழும் ஊர் ஊர்ச்சபை எனும் அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டது. சபை, ஸபை எனும் ஒலி மாறுபாட்டைக்காண்க. பல ஊர்கள் அடங்கிய பிரிவு நாடு எனப்பட்டது. நாட்டுப் பிரிவினை நிர்வகித்தோர் நாட்டார் எனப்பட்டனர்.

கோயில் நிருவாகம்

பொதுவாகக் கோயில்கட்குத் தரப்படும் கொடைகள் முதலானவை, சிவன் கோயிலாயின் ஸ்ரீ சண்டிகேசுவரர் பெயரிலும், வைணவக் கோயிலாயின் ஸ்ரீ விச்வக்சேனர் பெயரிலும் பதிவு செய்யப்படும். இந்நடைமுறையைத் தழுவித் திருநள்ளாறுடையார் கோயிலுக்குத் தரப்பட்டவையும் ஸ்ரீ சண்டிகேசுவரர் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் ஸ்ரீ சண்டிகேசுவரரே இக்கோயிலின் தலைமை நிருவாகி ஆவார். இவரை மூலப் பிரத்தியர் எனவும் கல்வெட்டுக்கள் குறிப்பிடும், (கல்வெட்டு எண்கள் 8, 11, 13, 14, 23, 24, 29, 33, 40, 46 காண்க.) இவரையன்றிக் கோயில் கணக்குகளைப் பதிவு செய்யக் கோயிற் கணக்கு என்பவரும் பண்டாரத்தார் (48) என்பவரும் சமய பண்டாரத்தார் என்பவரும் (35) இருந்துள்ளனர். இவரையன்றிக் கோயில் செயற்பாடுகளைக் கவனிக்க ஸ்/தானத்தார் (30, 41, 42, 44, 45) தேவர் கன்மிகள் (4, 27, 28, 29, 33, 40, 46, 49, 51, 54) ஸ்ரீ காரியம் (27, 28) மாஹேச்வரர் (30) ஸ்ரீ ருத்ர மாஹேச்வரர் (51) மாஹேச்வரக் கண்காணி (27, 28) கோயில் சாமதாயப் பணி (46) எனப்படுவோரும் இருந்தனர். இவர்களோடு பூசை முதலானவற்றைச் செய்யச் சிவப் பிராமணர் என்ற பெயரில் பெரும்பாலும் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர்கள் இருந்துள்ளனர். (3, 12, 18, 19, 22, 26, 28, 30, 46) இவர்களுள் முப்பது நாள் பணி என்ற சுழற்சி முறையில் பணி செய்தோர் முப்பது வட்டத்துச் சிவப் பிராமணர்கள் எனவும் அழைக்கப்பட்டனர் (25). இவர்களையன்றிக் கோயில் நன்கொடைகளைக் கவனிக்க நிமந்தக்காரர் என்போரும் இருந்தனர்(29). கோயிற் பணியாளராகத் திருப்பள்ளித் தாமம், திருநந்தவனம் ஆக்கும் திருத் தொண்டரும்(34) ஸ்ரீ பாதந் தாங்குவோரும் (பல்லக்குத் தூக்குவோர்) (49) குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் தவிர ஊராரும் நாட்டாரும் (30, 41, 47, 48) கூட நிருவாகத்தில் ஈடுபட்டிருந்தனர். இது போலவே கோயிலுக்கு எண்ணெய் வழங்கும் வாணியன் ஒருவனும் குறிப்பிடப்படுகின்றான்(28)

மேற்குறிப்பிட்டோரைத் தவிரப் புறத்தே இருந்து கோயில் நிருவாகத்தில் ஈடுபட்டவர் ஸபையார் ஆவர். இவ்வகையில் பல ஸபைகளைக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவையாவன:

சோளேந்திர ஸிம்ஹச் சதுர்வேதி மங்கலப் பெருங்குறி மகா சபை(4)

இடையாற்றுக்குடிப் பெருங்குறிச் சபை (6)

காயாக்குடிப் பெருங்குறிச் சபை (7)

ஸ்ரீ அருமொழி தேவச் சதுர்வேதி மங்கலத்து மகா சபை (8)

விருதராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகா சபை (14)

காயாக்குடியான உதையச் சந்திரச் சதுர்வேதி மங்கலத்து மகாசபை (23)

கோயிலில் எழுந்தருளுவிக்கப்பட்ட திருவுருவங்கள்

கோவிலில் மூலவர் தவிர வழிபாட்டிற்குரிய கல் திருமேனிகள், உலோகங்களால் ஆன உற்சவ விக்கிரகங்கள் முதலியன பற்றியும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இவ்வகையில் நமக்குத் தெரியவரும் திருமேனிகள் வருமாறு:

பெருமாள் நாடுடை நாயகப் பெருமாள்

நாச்சிமார்

நாச்சியார் போகமார்த்த பூண்முலை நாச்சியார்

மூத்த நாயனார் - (பிள்ளையார்)

இளைய பிள்ளையார் - (சுப்பிரமணியர்)

சேத்திர பாலப் பிள்ளையார் - (பைரவர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடக்கில் திருவீதியில் எழுந்தருளியிருக்கும் முதலிகள் மூவர் - (தேவாரம் பாடிய மூவர்)

அஸ்திர தேவர்

த்ரிபுர ஸுந்தர தேவர்

நாயனார் சம்பந்தப் பெருமாள் நாயனார். இவற்றுள் இறுதி மூன்றும் உலோகத்தால்

ஆனவையாக இருக்கலாம்.

இவை தவிர நன்கொடையாளர்கள் பெயர்கள் பொறித்த நடராசர் செப்புப் படிமமும் ஏதோ ஒரு தன்மம் செய்த நன்கொடையாளரின் கல்லாலான திருவுருவம் ஒன்றும் உள்ளன.

கோயிலில் நடைபெற்ற விழாக்கள்

கோயிலில் பல்வேறு காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட திருவிழாக்கள் பற்றிய செய்திகளும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவ்வகையில் தெரிய வரும் விழாக்கள் வருமாறு:

ஆட்டைத் திருவிழா - ஆண்டு தோறும் நடத்தப்படுவது. இதில் ஐந்தாம் நாளில் திருப்

பவனியும் தீர்த்தத் திருநாளும் நடந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

திரு மாசித் திருநாள், மற்றொரு மாசித் திரு நாள் - இதில் நடராசப் பெருமான்

எழுந்தருளும் ஆறாம் திருநாள்பற்றிக் குறிப்புள்ளது. (இவ்விழா மொத்தம் எத்தனை நாட்கள் நடந்தது என்பதை அறியக் கூடவில்லை.)

ஐப்பசித் திருப் பரணி, சித்திரைத் திருப் பரணி

திரு மார்கழித் திருவாதிரையில் திருமஞ்சனம்

திருக்கோயில் நந்தவனங்கள்

திருநள்ளாறுடையார்க்கு வேண்டும் மலர்கள் மாலைகள் முதலியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த திருநந்தவனங்கள் சிலவற்றையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடு கின்றன. அவை வருமாறு:

சுங்கந் தவிர்த்த சோழன் திருநந்தவனம் (முதலாம் குலோத்துங்கன் பெயரிலமைந்தது)

(15)

நூற்றுப் பதின்மர் திருநந்தவனம்- பெரும்பாலும் கோயில் பட்டர்கள் ஏற்படுத்தியதாகலாம் (15)

வாதுசெய் வாரணன் திருநந்தவனம் - (திருஞானசம்பந்தர் பெயராலமைந்தது)(27)

சிவன்மதி திருநந்தவனம் (27)

திருநாவுக்கரைசின் திருநந்தவனம் (27)

மடங்கள்

கல்வெட்டுக்களில் சில மடங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை வருமாறு :

திருநள்ளாற்றில் வாகளூர் நாடுடையான் பட்டர் செய்விக்கிற மடம் (14)

திருநள்ளாறுடையார் திருவீதியில் குலோத்துங்க சோழன் திருமடம்.

கல்வெட்டுக்கள் குறிப்பிடும் வேறு கோயில்கள்

கல்வெட்டுக்கள் வேறு பிற கோயில்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இவ்வகையில் நமக்குத் தெரிய வரும் கோயில்கள் பின் வருமாறு:

திருநள்ளாற்றில் அபிமுக்தேச்வரர் கோயில் (சுந்தர பாண்டியப் பிரம்மாராயர் எடுப்பித்தது) (7)

திருநள்ளாற்றில் குலோத்துங்க சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் (பெருமாள் கோயில்) (8)

காயாக்குடியில் திருவாய்ப்பாடி ஆழ்வார் கோயில் (கிருஷ்ணன் கோயில்) (7)

இவையன்றி ஒரு கல்வெட்டில் (19) காடு கிழாள் திடல் என்ற குறிப்புக் காணப்படுவதால் காடு கிழாள் என்னும் கொற்றவைக்கு ஒரு கோயில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

உப்பளம்

திருநள்ளாறுடையார்க்குக் காரைக்காலில் உப்பளம் ஒன்று இருந்தமையும் தெரியவருகிறது (45)

திருநள்ளாற்றுக் கோயிலில் நாடகம்

திருநள்ளாற்றுக் கோயிலில் கோலம் புனைந்து ஆரியக் கூத்து எனும் நாடகம் கி.பி.1053 இல் நிகழ்ந்தமை ஒரு கல்வெட்டின் வழித் தெரிய வருகின்றது (5). திருநள்ளாற்றுக் கோயிலில் இந்நாடகத்தை நடிக்கக் காணி பெற்றிருந்தான் ஸ்ரீ கண்டன் கம்பனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிமான மேரு நாடகப் பேரரையன் என்பான். இவனுக்கும் இவன் மக்களுக்கும் மாசி மாதத் திருநாளில் ஐந்தங்கமும் (அங்கம் நாடகத்தின் ஒரு பகுதி) வைகாசி விகாசத் திருநாளில் ஐந்தங்கமும் ஆடுவதற்கு மூவேலி நிலம் தரப்பட்டது. மேலும் இவனுக்கும் இவன் கூட்டத்தார்க்கும் இரண்டு திருநாள்களிலும் திருவிழாக் கொற்று (உணவு) க்காக இருபது கல நெல் வழங்கப்பட்டது. மேலும் இவர்கள் முகம் எழுத (ஒப்பனை செய்து கொள்ள) எண்ணெய், மாவு ஆகியன ஓரங்கத்திற்கு ஒரு நாழி என்ற விகிதத்தில் வழங்கப்பட்டன. இம் முகம் எழுதும் முறை நமக்குக் கேரள மாநிலத்தின் கதகளியை நினைவூட்டுகின்றது. இது போலவே நாடகம் ஆடுவோன் பெயரில் வரும் அரையன் என்ற சொல் திருவரங்கம், திருவில்லிப் புத்தூர், திருக்குறுங்குடி ஆகிய வைணவத் திருக்கோயில்களில் அரையர் சேவை என்ற நிகழ்ச்சியினை நடத்துவோராகிய அரையர் எனப்படுவோரை நினைவூட்டுகிறது.

இக்கல்வெட்டில் சில பகுதிகள் சிதைந்துள்ளன. எனினும் சிதைந்த பகுதியில் பச்சைப் பதிகம் என்ற தொகைச் சொல் காணப்படுகிறது. திருஞானசம்பந்தர் பாடிய போகமார்த்த பூண்முலையாள் எனத்தொடங்கும் தேவாரப் பதிகம் பச்சைப் பதிகம் எனப்படும். பாண்டி நாட்டில் அவர் சமணருடன் அனல் வாதம் மேற்கொண்ட காலத்துத் திருஞானசம்பந்தர் நெருப்பிலிடத் தேர்ந்த பதிகம் எனப் போற்றப்பட்டது. போகமார்த்த பூண்முலையாள் என்னுந் திருநாமம் திருநள்ளாற்றில் குடிகொண்டுள்ள அம்மையின் திருநாமமாகும். எனவே இக்கோயிலில் நடத்தப் பெற்ற நாடகம் இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைந்ததோ என்ற ஐயம் எழுகிறது. ஆனால் கல்வெட்டில் இதனை ஆரியக் கூத்து எனச் சுட்டுவதால் ஒருவேளை அது வடமொழி நாடகமாகவும் இருக்கலாம். தமிழ்க் கதையை ஆரிய நெறிக் கூத்தாக ஆடினரோ?

இக்கோயிலில் காணப்படும் இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டில் (22 - வரி 62) பச்சைப் பெதிய நல்லூர் என ஓர் ஊரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் பச்சைப் பதிகம் எனும் வழக்கை ஒட்டி அமைந்ததாகக் கொள்ள இடமுண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு திருநள்ளாறு உடையார் திருக்கோயில்

கல்வெட்டுக்கள் புகைப்படங்களும் வாசகங்களும்





In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1 தர்ப்பாரண்யேச்2வரர் கோயில், கருவறை, தெற்குச் சுவர்

சோழர் - முதலாம் இராசாதிராசன், 27, நாள் 90 கி.பி 1044

கஆ 1965/ 66எண்435 -புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 451

கல்வெட்டு சிதைந்துள்ளதோடு முழுதும் கிடைக்கவில்லை.

முதலாம் இராசாதிராசனின் 27 ஆம்ஆட்சியாண்டு குறிப்பிடப்படும் இக்கல்வெட்டின் தொடக்கத்தில் அவனுடைய மெய்க்கீர்த்தி காணப்படவில்லை. ஆனால் கீழேவரும் அவனது 28 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அவன் மெய்க்கீர்த்திஉள்ளது. இதற்கான காரணம் புலப்படவில்லை. காணப்படும் மெய்க் கீர்த்தியிலும் மாறுபாடுகள் உள்ளன.

செய்தி : முதலாம் இராசாதிராசனின் தந்தை முதலாம் இராசேந்திரன் காலத்தே வெள்ளான் வகையிலிருந்து சில நிலங்களை நீக்கியதற்கான அரசாணைபற்றிக் குறிப்பிடுகிறது. முழு விவரம் கிடைக்க வில்லை.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு
இருபத்தேழாவது நாள்
தொண்ணூறினால் கோ
வீரபாண்டியன் தலையும் தேவர்.....
காந்தளூர்....ஜ கேஸரி....
திருமண்டபத்து சா..ஜ ஸ்ரீ..

2. யினால் அருமொழிதேவச்
சருப்பேதி மங்கலம் பூழு(வ)
தேசமும் கங்கையும் கடாரமும்
கொண்டருளின உ.....
யர்க்கு யாண்டு 2 ....க்குவதாக
அருமொழிதெவச் சருப்பேதி3

3. வகையால ன் வெள்ளான் வகை
வரிசைக் கீழ் இறைக்குடலாக
நிலத்துக்குத் தவிர்ந்து இன்நில
முந்நாள் உடையாரை மாறி
......முக்காலே இரண்டு மா முந்திரி

4. வரியிலிடத் திருவாய்
மொழின்தருளினார் ரென்று
திருமந்திர ஓலை சளுக்கிக் குலகால
மூவேந்த வேளான் எழுத்தினா.....
மு..க கோனும் மதுராந்தக

5. சேகரநல்லூர் கிழவர் அரையர் ......
யிலூரன் மண்ணை கொண்ட சோழ
மூவேந்த ......மொழி தே.வ.. ....
உடையார்அறிவான்னாக ...

6. ளாரும் க்ஷத்த்ரிய சிகாமணி வள
நாட்டு....ன் சோழ மூவே......ன்
ஐய .....

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

2



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2 தர்ப்பாரண்யேச்2வரர் கோயில், கருவறை, மேற்குச் சுவர்

சோழர் - முதலாம் இராசாதிராசன்,28,கி.பி.1046

கஆ *441/1965/66.* புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் *452*

கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்துள்ளது.

செய்தி - கல்வெட்டு வரிகள் 1 முதல் 14 வரை இராசாதிராசன் மெய்க்கீர்த்தி உள்ளது. திருநள்ளாற்றுக் கோயிலின் நில முதல், நெல்முதல், திருமேனி முதல் முதலிய கோயிலின் பல்வேறு வகை வருவாய்கள் குறிப்பிடப்படுகின்றன.

வாசகம்

1. திங்களேர்தரு தந்றொங்கல் வெண்குடை கீழ் நிலமகள் நிலவ மலர்மகள் புணர்ந்து செங்கோ
2. லோச்சிக் கருங்கலி கடிந்து மன்னுபல்லூழியில் தென்நவர் குலமகன் மாநாபரணன் பொன்முடி ஆநா
3. ப் பருமணிப் படுந்தலை பொருகளத் தரிந்து வீரகேரளனை யானைகிடுவித் தசெவில் சுந்தர பாண்டிய ....
4. த்திகை கெடத் தொல்லையில் முல்லையூர்த் துரத்தி யொல்கலில் வேணாட்டரைசை சேணாட் டொதுக்கி மேவு புக
5. ழ் இராமகுட மூவர் கெட முநிந்து வேலைகெழு காந்தளூர்ச்சாலை கல மறுத் தருளித் தாஹெ
6. மல்லனும் மஞ்சக் கெதுவும் தன் றாங்கரும் படையால் ஆங்கவன் சேனையுள் கண்டப்பயனு
7. ம் கங்காதீரனும் வண்டமறக் களிறொடு மடியத் திண்டிறல் விதிர்தரல் விக்கியும் விசையாதித்த
8. னும் கருமுரள்ச் சாங்கமையனும் முதலிநர் ஸமரமேரு வொத்துடைய நிமிர்சுடர்ப் பொ
9. ன்நோ டயங்கரி புரவியொடும் பிடித்து தன்னாடையில் ஜெயங்கொண் டொன்னார் கொள்ளிப்பா
10. க்கை ஒள்ளெரி மடுப்பித் தொருதனி தண்டால் .....
11. ல் முடி அரிந்து முன் றனக்குடைத் தென்றமிழ் மண்டல முழுது எழுகடல் வீழம் புக்க இலங்கேச னா
12. கிய விக்கிரம பாண்டியன் பருமணி முடி தடித் தீண்டிய வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியர் வல்ல
13. வர் முதலென விளங்க வீற்றிருந்த ஜெயங்கொண்ட சோழன் உயர்த்த பெரும்புகழ் கோராஜகேசரி பந்மரான
14. உடையார் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு 28 ஆவது யா....தாவது உய்யக்கொண்டார் வளநாட்டு
15. முழையூர் நாட்டு ப்3ரஹ்ம தேயம் திருநள்ளாற்று திருநள்ளாறுடையார் நில முதலும் நெல் முதலும் பரிகலப்பிக்கின்ற முதலு
16. திருமேநி முதலும் ....

Public domain digitization Muthulakshmi Research Academy

3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3 தர்ப்பாரண்யேச்2வரர் கோயில், கருவறை, தெற்குச் சுவர்

சோழர் - முதலாம் இராசாதிராசன், 30, கி.பி 1048

(கல்வெட்டில் அரசனின் பெயர் விஜையராஜேந்திர தேவர் என உள்ளது. இப்பெயரை இராசாதிராசன் தன்னுடைய கல்யாணபுர வெற்றிக்குப் பின் புனைந்து கொண்டான்)

கஆ *444 /1965/66;* புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் *453*

வரிகள் *1* முதல் *88* வரை முதலாம் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. மேலே இவனது *28* ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் காணப்படும் செய்திகளை விடக் கூடுதலான செய்திகளை இம் மெய்க்கீர்த்தியில் காண்கிறோம். எனவே இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில் பல போர்கள் நடந்திருப்பது தெரிய வருகிறது. மேலும் இக்கல்வெட்டின்வழித் திருநள்ளாற்றுக் கோயிலில் காச்யப கோத்திரத்துப் பட்டர்கள் பலர் சிவப் பிராமணர்கள் என்ற பெயரில் பணியாற்றியமை தெரிய வருகிறது. கல்வெட்டுப் பகுதிகள் சிதைந்துள்ளன.

செய்தி : கொம்மன் தாதன் என்பவனிடமிருந்து 45 (பொற்)காசுகளைப் பெற்றுக் கொண்டு அதற்கு வட்டியாக வரும் 45 கல நெல்லால் கோயிலில் சிறுகாலைச் சந்தி வழிபாட்டின்போது திருமந்திரப் போனகம் படைப்பதாகக் கோயில் சிவப் பிராமணர்கள்ஒத்துக் கொண்டமைபற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் இராசாதிராசனது தந்தை முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் வழங்கப்பட்ட கொடைகள்பற்றியும் குறிப்பிடுகிறது. எனினும் அவற்றிற்கான முழு விவரங்கள் கிடைக்கவில்லை.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திங்
2. களேர் தரு தன்றொ
3. ங்கல் வெண்குடைக் கீழ்
4. நிலமகள் நிலவ மலர்மகள்
5. புணர்ந்து செங்கோலோச்சிக் கருங்க
6. லி கடிந்து தந்தையர்தமை
7. யன் தம்பியர் தன்றிரு (மை*)ந்த
8. ரென் றிவரை மணிமுடி சூட்டி
9. க் கன்னி காவலர் தென்னவர் மூ
10. வருள் வானகம் ஒருவனுக் கருளி
11. கானகம் ஒருவருக் கருளித்துப் பெ
12. பாருசிலைச் சேரலன் வேலை
13. கெழு காந்தளூர்ச்சாலை கல
மறுப்பித் திலங்கையற்
14. கரைசையும் அலங்கல்
வல்லவனையும் கன்ன
15. குச்சியர்காவலனையும் பொன்னணி
முடித்தலை
16. தடிந்து தன் கொடிப்படை யேவிக்
கன்னாசகர் விலிடு
17. கடகரி புரளத் தன்னாடையிற்
றமிழ்ப் பரணி கொண் டொ
18. ன்னார் வச்சிர நெடுவாள் விச்சயன்
வெரு நெளித் தஞ்சி ே
19. யாடத் தன் வஞ்சியம் படையா
லாங்கவன் பிதாவை மா
20. தாவொடுஞ் சதாமலி விங் குதிரப்
பூண்ட வெஞ்சமத் தக
21. ப்படுத் தயற் படை ஆஙவமல்லன்
பயத்தொடும் வர
22. விடும் ஒற்றரை வெருவரப்
பிடிப்பித் தாங் கவர் மார்வில்
23. ஆஹவமல்லனும் யாங்கணு மஞ்சி
நெந்ன கெழு
24. திச் செலுத்திய பின்னைத் தன்
புலிக்கொடிப் ப
25. டைஞ ரோட்ட வரிவாரண
வரைசைக் கடல்புரை சிறு
26. துறை போந்துறை தெய்வ ஹிமாதி
யென்றுறு துறை
27. முன்றிலு முணர் புந லாட்டி
யாங்கவ நெதக்கிரியில் ஒ
28. ங்கு கல் உழுவை யே றெழுதி உயர்
ஜ(ய)ஸ்தம்ப4ம்
29. எழில் பெற நிறுத்தித் தன்கழல்
பணிந் தொழுகும்
30. அரைசர்ரொடு செண்டாடிப்
பொருபுலி வீரக்கொடி ெ
31. யாடு தியாகக் கொடி யெடுத்
தொன்னலர் கவர்ந்த ெ
32. தான் னெதிப் பிறக்கம் இரவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

33. லர் னோக்கி வந்து விரவலி லவ
34. ன்விடு தணத்துக் கவன் வெல்பு
35. வி நுளம்பநும் காளிதா3ச2நும்
36. விளம்பரு தோற் சாமுண்டநும் பொ.
37. காம்மனும் வில்வராஜனும் (மு)
38. தலினர் வெஞ்சமத் திரியல் பொரு
39. தவர் பெருநெதி கவர்ந்து கூச்சா
40. பனந் கொப்ப மார்ப்ப தந்த..
41. லைத் தயல்படந் தடிந்து
42. முந் கொண்டு த...வந்து ...
43. முன்னிற்ப்ப அப்பகை செ....த்
44. துப் பகை வழியிற் தப்பில...
45. வரைசர்க ளாங்கது மீட்க மாட்ட...
46. பூங்கழல் சரணெனப் பு
47. குத அரணவ நளித்து தடமுடி மீ
48. ட்டுக் குடுத்துத் தடமுடிக் கிடங்கு...
49. திருந்த தடங்கை வந்த படை
50. யைப் பறித்துடந் கொண்டு பொரு
51. தவர் ப....ரத்துலந்தஞ்
52. சியும் அஞ்சாதாநாய் வெஞ்
53. சமங் கருதி விட வந்த பேற்கடை
54. கள் முந் பெறி தேவற்குறை வரிந் தொ
55. ருதாஞ் சார்த் அறைகழல் தன்பு
56. கழ் பாத முன்ப....மாறிரட்டரில் ஒரு
57. வனைப் பெண்ணுடை உடுத்தி
58. ஒருவனை அஞ்சுசிகைபடச் சி

(சுவரில் முதல் அங்கணம்)

59. ரப்பித்தவன் விடுத்த
60. ஞ்பேற்கடை த...னு...
61. பாக்கி ஆஹவமல்லனும்
62. ஆஹவமல்லியும் என
63. பியர் இடுவித்து அன்றவன்
64. ...த்த வேற்கடை தன்ன
65. வன் போக்கி உட்குடன்
66. நிலவிடாது சென்ற....
67. முதுகிடப் பொருது தன
68. க்கயில் முனதால் நாடு
69. ....றே மாநக்கை மலை த
70. டவிக் கல்லியாணபுரம் மெ
71. ன்னுந் தொன்னகர் துக ளெ.
72. ற்பித் துகைப்பித் தன்நிகர் அ
73. ரைசரை திறை தரு மாளிகை..
74. யாக்கி யங்கது காக்க...
75. ளற் பூவ....ராகுத
76. ன் மு... ளிற்ற ை
77. ரசாமுண் ... வரிபரியொ
78. டுங் கரியொடும் பட்டு ...ப...

(சுவரில் இரண்டாம் அங்கணம்)

79. பெருநகர் விஜையராஜனெ
80. ன்று வீர அபி4ஷேகஞ் செ
81. ய்து ஸ்ரீகமு விஸ்வலோகத்து
82. (விள)ங்கு மனுநெறி நின்று
83. (அஸ்வ)மேதஞ் செய் தரைசு வீற்
84. றிருந்த ஜயங்கொண்ட சோழ
85. (னுயர்)ந்த பெரும்புகழ் கோவிராஜ
86. கேஸரி எந லாகிப் பேச எண்டிை
87. சய் நிறைந்த கீர்த்தி ஸ்ரீவி
88. ஜையராஜேந்த்3ர தே3வர்க்கு யாண்டு
89. 30 ஆவது உய்யக்கொண்டார்
90. வளநாட்டு முழையூர் நாட்டு ப்3ரஹ்மதே3யந் திருநள்ளாறுடை
91. யார் சி2வப்3ராஹ்மணன் காச்2யபன் வைகுந்தன் தூவடி
92. பட்டனுங்காச்2யபன் கணபதி வைகுந்தனுங் காச்2யப
93. நக்கந் திருநா(ர)ண பட்டனுங் காச்2யபன் திருநாணன் கு
94. ளுந்தான் பட்டனுங் காச்2யபன் செல்வநள்ளாறு தேவ
95. னுங் காச்2யபன்காச்2யபன் பட்ட நாரணனுங் காச்2யப நாராயண
96. ன் ....னுங் கௌதவ னிருபத்துநால்வன்
97. செம்மானும் கௌதவன் கடம்பன் சோமாசியானும் தி
98. ரையன் நக்கன் யாதவ பட்டனு மிவ் வனைவோம் ....
99. கா2மணி வளநாட்டு முழையூர் நாட்டு விழியூர் வெள்ளாளன்
100. விழியூருடையான் கொம்மன் தாதன் கையா வியாங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

101. கள்கொண்டு அன்றாடு நற்காடு 45 இக்காசு நா
102. ற்பத்தைஞ்சுங் கொண்டு காசொன்றுக்கு நெல்லுக் க
103. லமாக ஆட்டை வட்டம் நாற்பத்தைங்(கலநெ)ல்லுப் ப
104. லிசை பொலிவதாகவும் பொலிந்த .....(உ)
105. டையார் திருநள்ளாறுடையார்க்குச் சிறுகாலை ஸந்தியில்

(சுவரில் மூன்றாம் அங்கணம்)

106. (திரு)மந்திரபோனகத்துக்கு அ
107. ய்ங் கறியமுது ஒன் ....
108. முது உரியும் அடைக்காயமு .....
109. த்தும் பூர்வ தேச2முங் கங்(கையுங் கொண்ட)
110. ருளின பெரிய தேவற்கு யா ....
111. டையான் தாதன் கொம்ம.....
112. துக்குப் பலிசை செகுதல்...
113. க்கு ஒந்றும் பொலியூட்டாகக் ....
114. க கடவோமானோ மிக் கோயி...
115. ப்3ராஹ்மணரோம் || இவர்கள் ...
116. மொழிதேவ வளநாட்டுப் பு....
117. வெள்ளாளன் கணபதி .....
118. ன் னெழுத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4 தர்ப்பாரண்யேச்2வரர் கோயில், கருவறை,வடக்குச் சுவர்

சோழர் - முதலாம் இராசாதிராசன், 30, கி.பி.1048

க.ஆ 436/1965-66; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் 454

செய்தி - ஸ்ரீசோழேந்திரசிம்மச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருநள்ளாறுடையார் கோயிலிலே கூடித் திருநள்ளாறுடையார் கோயில் தேவகன்மிகள் பக்கல் (கிபி.1048இல்) மாசி மாதத்தில் 50 காசு பெற்றுக் கொண்டு இதற்கு வட்டியாக ஒரு காசுக்கு ஓராண்டிற்கு ஒரு பருவ விளைச்சலுக்கு இரண்டு கல நெல்லென நிச்சயித்தனர். இந்த நூற்றுக்கல நெல்லுக்கான வரியைத்தாங்களேஅரசாங்கத்திற்குச் செலுத்திக் கொள்வதாகவும் திருநள்ளாறுடையார் கோயிலில் மாசித் திருநாள் விழாவின்போது சுவாமியை எழுந்தருளப் பண்ணவும் திருவிழாப்புறம் என்ற பெயரில் சோழேந்திரசிம்மச் சதுர்வேதிமங்கலத்தில் தாமோதிர வாய்க்கால் என்று அழைக்கப்பட்ட வாய்க்காலின் தென்கரையில் ஏற்கனவே திருநள்ளாறுடையார்க்குச் சொந்தமான நிலத்தில் முக்கால் வேலி இரண்டு மா நிலத்தைப் பிரித்துக் கொடுத்தனர்.மேலும் இந்நிலத்தில் விவசாயம் தொடர்பான சென்னீர்,வெட்டி முதலான பணியாளர்களுக்கான செலவையும் தாங்களே ஏற்றுக் கொள்வதாகவும் உறுதியளித்தனர். இப்படித் திருநள்ளாறுடையார் கோயில் வசமிருந்த காசுகளை வட்டிக்கு விட்டு மாசித் திருநாள் புறப்பாடு என்ற திருவிழாவை நடத்துவதையும் அரசுக்குச் சேரவேண்டிய வரியைச் செலுத்துவதையும் இந்த நிலக்கொடை மூலம் இச் சபையார்உறுதி செய்துள்ளனர்.

(குறிப்பு : கல்வெட்டில் திருநள்ளாறு உய்யக்கொண்டார் வளநாட்டு முழையூர் நாட்டுப் பிரம்ம தேசம் என்றுமட்டும் குறிப்பிடப்படுகிறது. மேலும் இதில் ஸ்ரீசோழேந்திரசிம்மச் சதுர்வேதிமங்கலச் சபையார் திருநள்ளாறு கோயிலில் கூடி முடிவெடுத்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் திருநள்ளாறு வேறு ஸ்ரீசோழேந்திரச் சிம்மச்சதுர்வேதி மங்கலம் வேறு என்று கொள்ள வேண்டும்.இவ்வாறு வேறு ஊர்ச்சபையார் திருநள்ளாற்றுக் கோயிலில் கூடி முடிவுகள் செய்வது வழக்கமான ஒன்றென்பது கீழே வரும் பிற கல்வெட்டுக்களாலும் தெரிய வருகின்றது)

வாசகம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ
2. ராஜாதி4ராஜ தே3வர்க்கு யா
3. ண்டு 30 ஆவது உய்யக்
4. கொண்டார் வளநாட்டு முழை
5. யூர் நாட்டு ப்3ரஹ்ம தே3யம் ஸ்ரீ சோ
6. சாளேந்த்3ர ஸிம்ஹச் சதுர்வே
7. தி3 மங்கலத்துப் பெருங்குறி ஸ
8. பை4யோம் உடையார் திருநள்ளாறு
9. டையார் ஸ்ரீ கோயிலிலே கூட்டங்
10. குறைவறக் கூடி யிருந்து இத்தே
11. வர் கன்மிகள் பக்கல் இவ்வாட்டை மா
12. சித் திங்கள் கொண்ட காசு 50 இக்கா
13. சு ஐம்பதுக்கும் காசின்வாய்ப் பூப்
14. பிற் கல நெல்லாக ஒராட்டை நா
15. ளைக்குக் காசு ஒன்றுக்குப் பொலிசை நெல்
16. லு இரு கலமாக வந்த நெல்லு நூற்றுக் கலம்
17. இன் நெல்லு நூற்றுக் கலத்துக்கும் நாங்
18. கள் இறை யிறுக்கத் திருநள்ளாறுடையார் மா
19. சித் திருநாளுக்கு திருவிழா வெழுந்தருளத் திருவி
20. ழாப் புறமாக இறையிலி செய்து குடுத்த நி
21. லமாவது சோளேந்த்3ர சிங்க தசுர்வேதி3 மங்
22. கலத்துத் தாமோதிர வாய்க்காலின் தென்க
23. ரைத் திருநள்ளாறுடையார் நிலம் பழம்படி
24. முக்காலே யிரண்டு மா இன்நில முக்காலே யிர
25. ண்டு மாவுக்கும் இக்காடு ஐம்பதுக்கும் பொலி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. சை ஆட்டை வட்டன் நூற்றுக் கலத்துக்கும் இந்

27. நிலத்துக்கு சந்த்3ராதி3த்தவற் ..களே யிறை

28. இறுக்கக் கடவோமாகவும் இன் நிலத்துக்குச் செ

29. ன்னீர் வெட்டி உள்ளிட்ட வெண் ...வெட்டியும்

30. நாங்களேய் செய்யக் கடவேமாகவும் இக்கா

31. சு குடுத்து மீளச் சோரப் பெறாதா மாகவும் இப்

32. பரிசு திருநள்ளாறுடையார்க்கு இக்காசுக்குப் பொ

33. லிசை செ(ய்து) கு (டு)த்து இன் நி (லத்) து(க்கு)

34. ஞ் சந்த்3ராதி3த்தவற் இறை யிறுக்

35. கக் கடவோமாக இறையிலி செய்

36. து குடுத்தோம் சோளேந்த்3ரசிங்க

37. சதுர்வேதி3மங்கலத்து ஸபை4யே

38. யாம் ஸபை4யுள்ளிருந்து செருப்பள்

39. ளிக் கணவர் தேவக்ரமவித்தனும் பெ

40. ருமுஞ்சூற் றிராம தேவ க்ரமவித்தனு

41. ம் இழக்கந்திறத்து தேவயக்ரமவி

42. த்தனும் பணியால் பணி கேட்டு எழு

43. திநேன் இவ்வூர் மத்3யஸ்தன் சுந்தரந்

44. அரங்கநேன் இவை என் எழுத்து

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

5



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5 தர்ப்பாரண்யேச்2வரர் கோயில், கருவறை, வடக்குச் சுவர்

சோழர் - முதலாம் இராசாதிராசன், 35, கி.பி.1053

கஆ 437/1965/66; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 455

செய்தி - கோயிலில் மாசி மகம், வைகாசி விசாகம் ஆகிய நாட்களில் திருவிழா நடைபெற்றமை குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழா நாட்களில் ஆரியக் கூத்து என்ற நாடகம் நடைபெற்றதையும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதில் பங்கேற்கும் நடிகர்களுக்கு நிலதானமும் வழங்கப்பட்டமை இக்கல்வெட்டால் தெரிய வருகிறது. ஏற்கனவே நிலதானம் பெற்றிருந்த ஸ்ரீகண்டன் கம்பனான அபிமானமேரு நாடகப் பேரரையன் என்பவனுடைய மக்களுக்குக் கோயிலில் மாசி மாதத் திருநாள், வைகாசி மாதத் திருநாள் ஆகிய நாட்களில் ஆரியக் கூத்து ஐந்து அங்கங்களும் ஆடுவதற்குப் பச்சைப்பெதியநல்லூர் என்ற ஊரில் இருந்த நிலத்தில் மூன்று வேலி நிலம் வழங்கப்பட்டது. தரப்பட்ட நிலம் தருமபுரத்திற்கு அருகில் உள்ளதாகக் கல்வெட்டுகுறிப்பிடுவதால் இவ்வூர் இப்பொழுதுள்ள தருமபுரம் அருகில் இருந்திருக்கலாம்.

வாசகம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கலியாணபுரமும் வெளி
2. க் கிராமமுங் கொண்ட கோவிராஜ கே
3. கஸரி பம்மராந உடையார் ஸ்ரீ விஜ
4. ஜயராஜேந்த்3ர தேஃவர்க்கு யாண்டு 35
5. ஆவது ஜயங்கொண்டசோழ வள
6. நாட்டு முழையூர் நாட்டு ப்3ரஹ்ம தேஃயந் திரு
7. நள்ளாற்று திருநள்ளாறுடையார்
8. ஸ்ரீ கோயிலில் முன்புஆரியக் கூத்துக்
9. காணியுடைய ஸ்ரீகண்டன் கம்பநான
10. அபி4மாநமேரு நாடகப் பே(ர)ரையனு
11. ம் ஸ்ரீகண்டன் அர(ங்க)ன் மக்களுக்கு
12. இக்........தாநம் பச்சைப் ப
13. திய (நல்)லூரில் இவர்களுக்கு மாசி மா(த)
14. த் திருநாளில் ஐஞ்சங்கமும் வை
15. காசி விசாகத்திருநாள் ஐஞ்ச
16. ங்கமும் ஆடக்கடவார்களாக விட்ட நி
17. லம் மூவேலி இன்நிலமாவது
18. புரவுவரி வாய்க்காலுக்குத் தெற்கு
19. ம் தலைகணி வாய்க்காலுக்குக்
20. கிழக்கும் இத்தேவர் நிலத்து
21. க்கு மேற்கும் தருமபுரத் தெல்
22. லைக்கும் உடையார் நிலத்துக்கு
செய்தி - காயாக்குடிச் சபையார் திருநள்ளாற்றுக் கோயில் தெருவிலிருந்த குலோத்துங்க சோழன் திருமடத்தில் கூடிக் கோயிலில் ஒருநந்தா விளக்கு எரிப்பதற்கு நிலம் இறையிலி செய்து கொடுத்தமையைத் தெரிவிக்கிறது

குறிப்பு - வரி19இல்ஆண்டு 5 எனக்குறிப்பிடப்படுவதால் ஆட்சி யாண்டு 5 எனக் கொள்ளப்பட்டது. பூ மன்னு பதுமம் எனத் தொடங்கும் இரண்டாம் குலோத்துங்கனின் மெய் கீர்த்திப் பகுதி இதில் உள்ளது. கல்வெட்டில் வரி 15 இல் பட்டணப் பெருவழி என ஒரு பெருவழி குறிப்பிடப்படுகிறது. இது பெரும்பாலும் நாகப்பட்டினம் செல்லும் பெருவழியாக இருக்கலாம். கல்வெட்டு சிதைந்துள்ளது.

வாசகம்

1. (சிதைந்துள்ளது)
2. தவத்தால் பருதி வழித் தோன்றி நெடுமா லிவ னெனத் திருமுடி சூடி இருனில மகளை உரிமையிற் புணர்ந்து....
3. வரை நிகற்பச் செய மகள் செழுந்தனச் சந்தனச் சுவட்டாற் புயமிரு கயிலைப் பொருப்பெநத் தோன்றி நாமகள்.....
4. னெனத் தவிள நன்நிறந் தனித்துடையே நென புகழ் மகிள் சிந்தை மகிழு நாளிலும் ஒரு குடை நிலவும் பொருபடைத் திகிரி வெயிலுங்....
5. கோ லினி துலாவ மீனமுஞ் சிதை யஞ்சி சிதைந்து வானுயர் பொன் னெடு மேருவில் புலி வீற்றிருப்ப உம்பரி யானை ஒரெட்டுநுக்குந் ஸ்தம்ப மென்ன ....
6. பல்வேறு புள்ளினு மல்லது சிறையெனப் படுத....தெலுங்கர் மாளவர் கலிங்கர கோசலர்....
7. திகர் வங்க ரங்கர் மத்தவர் மத்திரர் கங்கர் சோனகர் ....யன்றறை கழல் வேந்தரும் எல்லா வரை....
8. சிமயப் பொற்றப யிமையப் பாவையுஞ் சிவனும் போல புவனமுழுதுடையா ளிவன் திருமணி...
9. துடை...,செம்பியன் கிழானடி ஒரு மருங்குடந் வந்திருப்ப செம்பொன் வீரஸங்நாஸனத்து..
10. யார் கோ விராஜகேஸரி பந்மரான ஸ்ரீ குலோத்துங்க தோழ தேவற்கு யாண்....ஷப நாயற்று அபர இன்னிலம் ஊர் தரம் இடுங் காலம் தரம் இடப் பெறு பக்ஷத்து சஉது...
11. கிழமையும் ..... உய்யக் கொண்டார் வள நாட்டுக் குறும்பூர் நாட்டு ப்3ரஹ்ம தேயம் காயாக்குடி பெருங்குறி மஹா...
12. இன் நாட்டு திருநள்ளாறுடையார் திரு வீதியில் குலோத்துங்க சோழன் திருமடத்திலே
13. இ தேவர்...க்குத் திருநுந்தா விளக்குப் புறமாக நாங்கள் இறையிலி செய்து குடுத்த பரிசாவது....
14. ....பார்கெல்லை குண்டிமடைச் சீரிளங்கோ பட்டந் உள்ளிட்டார் நிலம் முக்காலுக்கு மேற்கும்...
15. தென்பாக் கெல்லை திருநுந்தா விளக்குப் புறத்துக்கு பட்டண பெருவழிக்கு கிழ..வடபார்க் கெல்லை இத்தேவர்...
16. தா விளக்கு ...துக்....சைந்த பெருநான் கெல்லையுள்நடுவு பட்ட நிலம் வக காலே முக்காணியும் மிகுதிக் குறை
17. ...உண்ணிலம் ஒழிவின்றி....க்ருஷ்ண பட்டர்க் குசை கலம் இட்ட காசு+ றாரைய மிட்டுக்கீழ் முதல் கொண்டு பின்பு திருநு...
18. க்குப் புறமாக இறையிலி.... ணிக வள நாட்டு ஒக்கூரில் ஒக்கூருடையான் செய்யவந்தான் திருநள்ளாறுடையான்வைத்ததிரு
19. நுந்தா விளக்கு ஒன்று இவ்விளக்கு....யாண்டு 5 ஆவது திருநுந்தா விளக்குப் புறமாக இறையிலி செய்ய கொண்ட காசு 91/2 இக்காசு
20. ஒன்பதரையுங் கொண்டு ஆதிசண்....குடுத்தோம் பெருங்குறி மஹா ஸபை4யோம் இன் நிலம் ஊர் தரம் இடுங் காலம் தரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடப் பெறு

21. வது ஆகவும் ,,,,நாங்களே செய்யக் கடவோமாகவும் இ நிலத்துக்கு நீர்க் கியந்தபடி

பாயவும் வாரவும் பெ

22. .....கவும் இந்நிலத்தில் வ.... இப்பரிசு ஸம்மதித்து இக்காசு ஒன்பதரையும் காசு

பதிநொன்றும் கைய்யிலே அறக்கொ

23. ண்டு இறையிலி செய்து குடுத்தோம் ....ணியருளவும் ஆதிஸண்டேச்2வர

தே3வற்க்கு பெருங்குறி மஹா ஸபை4யோம் குறியில் இருந்து கண

24. ...பணித்தார் வங்கிப் புறத்து... சங்கர நாராயண பட்டர் பணியாலும் குண்டிமடை

க்ருஷ்ண பட்டர் பணியாலும் வங்கிப்புறத்து

25. ....பட்டர் பணியாலும் க...பட்டர் பணியாலும் தூற்பில் திருவெண்காடு பட்டர்

பணியாலும் காடுவெட்டி சீ2க்ருஷ்ண பட்டர் பணியாலும் ...

26. யால் ஊற் கணக்கு ...யன் எழுத்து இப்படிக்கு குண்டூர் பிச்சதேவ பட்டன் எழுத்து

இப்படிக்கு இராயூர் ஜாதவேத பட்டன் எழுத்து



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25 தர்ப்பாரண்யேச்வரர்கோயில், மகா மண்டபம், வடக்குச் சுவர்

சோழர் - இரண்டாம் இராசராசன், 19, கி.பி 31-1-1165

கும்பம், உத்திரம், ஞாயிற்றுக்கிழமை

கூஆ 109/1968-69; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 474

குறிப்பு -கல்வெட்டு ஆண்டறிக்கை ஆட்சி யாண்டு 15 எனக் கொண்டு அரசனின் காலத்தை 12-2-1161 எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் கல்வெட்டில் ஆண்டு 19 என்பது தெளிவாக உள்ளது.

செய்தி - கோயில் சிவப்பிராமணர் குனித்தான் சிவதேவன் என்பவனிடமிருந்து 100 காசுகள் பெற்றுக் கொண்டு கோயிலில் ஒரு நந்தா விளக்கு எரிக்க ஒப்புக்கொண்டமையைத் தெரிவிக்கிறது.

குறிப்பு - கல்வெட்டில் இறைவியின் பெயர் போகமார்த்த பூண் முலையாள் எனக் குறிக்கப்படுகிறது. இது சம்பந்தரின் தேவாரத்தில் காணப்படும் பெயராகும்.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவி ....
2. சூழத் திங்கள் வெண்குடைத் திசைக்க வீரெட்டுந் தங்கு தனிக் குடந்தானென விளங்க கருங்கலிப் பட்டிகை செங்கோல் துரப்ப பொருகதி ராழி புவிவளத் துடந்வர வில்லவ ரிரட்டர் மீனவர் சிங்களர் பல்ல
3. வர் முதலியர் பாத்திவர் பணிய எண்ணருங் கற்ப்பி மண்ணகம் புணர்ந்து செம்பொன் வீரஸங்நாஸனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜராஜ
4. தேவற்க்கு யாண்டு 19 வது கும்ப நாயற்று அபர பக்ஷத்து நாயற்றுக் கிழமையும் பெற்ற உத்திரத்தி நாள் உய்யக் கொண்டார் வள நாட்டு முழையூர் நாட்டு உடையார்
5. திருநள்ளாறுடையார் கோயிலில் முப்பது வட்டத்து சிவப் பிராமணர் காணி உடையதேவனும் காசிப....ழந்தரனும் இவந் தம்பி பெரியாழ்வாநான நாடுடை நாயக பட்டனும் இவர்கள் மக்கள் எ...
6. ழகனும் குழுந்தான் சிவதவனப் பெருமாள் நாடுடைப் பெருமாள் ஐயனும் இவன்தம்பிதேவனும். காசியபந்..
7. இவன் மகன் சோழ பிச்சனும் கெ3வுதவன் மதுராந்தகன் மூவாயிரத்தோர் செய்தான்நாடுடைய பெருமாளும் காசியபன் சீருடைந்நான சுந்தரத் தோளுடையான் குலோத்துங்க
8. விக்கிரம சோழ பட்டனும் இவந் தமையன் மானசான்றளி மாரான சான்றருளிய பெரியான் தீராவினை தீர்த்தாநான நாடுடை நாய...பண்டிதரும் காசியபன் சான்று போநான்நாடுடைப் பெருமான் நாற்பத்தெண்ணாயிரப் பண்டிதரும் இவந் தம்பி சிறியான்...
9. உய்ய வந்தாநான தியாக சமித்திர பட்டனும் காசி..லச்சந் சிறியான்
10. பெருமானும் இவந் தம்பி சான்று போநான் உடைய பிள் ஆளும் பிள்ளையான ச..ய பண்டிதரும் காசியபன் பெரியாழ்வான் உடையாந்
11. மண்டையாழ்வாநான ஓதிய நல் வேதிய பட்டனும் கெ3வுதமன்திசிற்..த்தா
12. ன் உய்ய நின்றாடுவான் மண்டையானும் கௌதமன் ....மும் பள்ளி சேரமான் தோழனும் இவன் தம்பி ....கூத்தப்....நல் வேதிய பட்டனும் இவந்
13. தமையன் சிவலோகமுடையான் ஆளவந்தாநான நாற்பத்....துடையானான இடப வாகந பட்டனும் ஆதிரையான் நாற்பத்தெண்ணாயிர பட்டனும் கெ3வுதமன் திருச்சிற்றம்பலமு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. டையாந் சுந்தர்த்
தோளுடையாநான சான்றருளிச்
செய்த பட்டனும் கெ3வுதமன்
திருவகத்தீசுரமுடையான் உ...

15. யாழ்வான் திருநள்ளாறு பட்டனும்
காச்2யபன்....

16. ...காக்கு நாயக பட்டனும்
காச்2யபந் ஆண்டதே...வாரணம்
சீரொடும் பொலிவானான
திருக்க....

17. ...சு பட்டனும் இவ்வனைவோம்
ஜயங்கொண்ட .....இளவளப் பாக்
கிழான் குநித்தாந் சிவ

18. தேவநான மீனவன் மூவேந்த
வேளாநுக்கு நாங்கள் உபையத்
தீட்டு குடுத்த பரிசாவது இத்
திருநள்ளாறுடையார் கோயில் நித்த
நிமந்மாகச் சந்தி

19. ராதித்தவல் செல்ல நாள் ஒன்றுக்கு
வைக்கும் திருநுந்தா விளக்கு
ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு வேண்டும்
நெய் எண்ணை உழக்காக வந்த
நெய் எண்ணை

20. இற்றை நாளால் இவப் பக்கல்
நாங்கள் முப்பது வட்டத்துச்
....கைக் கொண்ட காசு 100
இக்காசு நூறுக்கும் வந்த பலிசைக்கு
திருநுந்தா விளக்கு...

21. ...போகமார்த்த பூண்முலையா....
எண்ணை உழக்காக வந்த எண்ணை
சந்திராதித்த...

22. து திருநுந்தா விளக்கு எரிக்கக்
கடவோமானமைக்கு கல்
வெட்டுவிக்கக் கடவோமாகவும்
சம்மதித்து உபையத் தீட்டுக்
குடுத்தோம் இழ் வனைவோம்

23. இப்படிக்கு இவை உடையார்
திருநள்ளாறுடையார் கோயில்
முப்பது வட்டத்து சிவப்
பிராமணரோம் எழுத்து இப்படிக்கு
இவை தேவனமம் காச்2யபன்
சுந்தரத்

24. தோளுடையானான குலோத்துங்க
சோழ பட்ட னெழுத்து
இப்படி அறிவேன் சீ காரியம்
கரு...ருடையான் தேவன்
திருநாகீச்2வர முடையானெழுத்து

25. இப்படி அறிவேன் சீ மாகேச்2வரக்
கண்காணி நெல்வாய்ச் சேரி
உடையான் அழகிய தேவ
னெழுத்து அ....தேவ னெழுத்து
இப்படி அறிவேன் சீ மாகே2வரக்
கண்காணி...

26. உடையான் திருத்தோண்டீச்2வர
முடையான் கும்ப யோ நெழுத்து
இப்படி அறிவேன் மாகேச்2வரக்
கண்காணி புத்த நல்லூருடையான்

27. தந் நுகரும் பொற்கழல் ....ரர்கள்
நாயக னெழுத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26 தர்ப்பாரணயேச்வரர் கோயில், மகா மண்டபம், வடக்குச் சுவர், அடிப் பகுதி

சோழர்- இரண்டாம் இராசாதிராசன், கி.பி 11, 11-8-1176

சிம்மம், பூர்வ பக்ஷம், பஞ்சமி, சுவாதி, புதன்கிழமை

கஆ *394/1902 &112/1968-69;* தெஇக *7* எண் *1026*

புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் *475*

செய்தி - கோயில் சிவப் பிராமணர் செந்நாடுடையான் உடைய நம்பியாரான தொண்டைமானாரிடமிருந்து உபையத் தீட்டு பெற்றுக்கொண்டு கல்வெட்டிக் கொடுத்தமை குறிப்பிடப்படுகிறது.

குறிப்பு - கல்வெட்டு முற்றுப் பெறாததால் செய்தியை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை.

கல்வெட்டில் குறிப்பிடப்படும் விழியூர் இன்று திருநள்ளாற்றுக்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள விழிதியூராக இருக்கலாம். சிவப் பிராமணர்கள் குலோத்துங்க சோழ பட்டன்,விக்கிரம சோழ பட்டன் என அரசன் பெயரோடு அமைந்துள்ளமை குறிக்கத் தக்கது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார்
மாதரும் கலை மாதரும் அடல்
சூழ்ந்த போர் மாதருஞ் சீர்
மாதரும் அமர்ந்து வாழ கடல்
சூழ் புவி யேழும் பாற்கடல்
போற் புகழ் பரப்ப ஆதி
யுகமா மென்னச் சோதி முடி
புனைன் தருளி அறு சமையமும்
ஐம் பூதமும் நெறியில் நின்று
பாலிப்ப சேரலரும் தென்னவரும்
சிங்களரும் கொங்கணரும்
பேரரசு பெற வேண்டிப் பிரியாது
சேவிப்ப தம்மரசு தாம் பெற்று
தம்முடனே முடி சூடி அம்
மருங்குற தேவியர்கள் அ....ங்கலம்
பெற்றருளி வாழி வாழி மணம்
புணர்ந்து ஊழி யூழி பல வோங்கிச்
செம்பொன் வீரஸங்காஸனத்து
உலகுடைமுக்கோக்
கிழானடிகளொடும் வீற்றிருந்
தருளிய கோ விராசகேசரி
பற்மரான திரிபுவனச்சக்கர
வத்திகள் ஸ்ரீஇராஜாதிராஜ.தேவற்கு
யாண்

2. டு பதின்ஒன்றாவது ஸிங்கநாயற்று
பூர்வபக்ஷத்துபஞ்சமியும்
புதன்கிழமையும் பெற்ற சோதி
நாள்உய்யக் கொண்டார் வள
நாட்டு முழையூர் நாட்டு
உடையார் திருநள்ளாறுடையார்
கோயில் முப்பது வட்டத்து
காணி உடைய சிவப் பிராமணன்
கௌதம கோத்திரத்து உண்மை
சொன்னானும் ஆளவந்தியான்
நாற்பத்தெண்ணாயிர
பட்டனும்தேவர்கள் சுந்தரனான
சான்றருளி செய்த பட்டனும்
உமை யாழ்வானான திருநள்ளாற்று
பட்டனும் மண்டை யாழ்வானான
ஓதி நல்ல வேதிய பட்டனும்
காசிப கோத்திரத்து தேவர்கள்
சுன்தரனான குலோத்துங்க சோழ
பட்டனும் ஆழ்வானான விக்கிரம
சோழ பட்டனும் நாடுடைப்
பெருமா

3. ன் தில்லை நாயக பட்டனும்
கூத்தாடுவானான தியாக
சமுத்திர பட்டனும் நாடுடைப்
பெருமாளான கல்லியாண
சுந்தர பட்டனும் நன் உடைப்
பெருமாளான நாற்பத்தெண்ணாயிர
பண்டிதனும் நாடுடைப்
பெருமாளான நாடுடை நாயக
பண்டிதனும் காசிப கோத்திரத்து
திருச்சிற்றம்பல முடையானான
ஏழ்கடலும் சூழ்ந்தானும்
ஆழ்வானான நாடுடை நாயக
பட்டனும் உமையாழ்வானான
பொற்கோயில் பட்டனும்
பிச்சாண்டானான சோழ கேரள
பட்டனும் திருக்கற்றளிப்பிள்ளை
யானதிருநள்ளாற்றுப்பண்டிதனும்
கெவுதம கோத்திரத்து மூவாயிரத்
தொருவனான கரிகால

4. னான பாஞ்ச பொற் பீட
பட்டனும் இவ் வனைவோம்
நித்த வினோத வள நாட்டு
ஆழுர்க் கூற்றத்து விழியூருடையந்
செந்நாடுடையான் உடைய
நம்பியாரான தொண்டைமானார்
பக்கல் உபையது கொண்டு
கல்வெட்டிக் குடுத்த பரிசாவது
இன்னாயனார் கோயிலிலேய்
இன்னாளால்....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27 தர்ப்பாரண்யேச்வரர்கோயில், மகாமண்டபம், வடக்குச்சுவர்,

சோழர், மூன்றாம் குலோத்துங்கன், 5, கி.பி.1183

கஆ 113/1968-69; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 478

செய்தி - முதலாம் குலோத்துங்கனின் 16 ஆம் ஆட்சியின்போதும் 19 ஆம் ஆட்சி யாண்டின் போதும் திருநள்ளாற்றுக் கோயிலுக்குத் திருமடை விளாகம், திருநந்தவனம் முதலானவற்றிற்குத் தந்த கொடைகள் மூன்றாம் குலோத்துங்கனின் 5ஆம் ஆட்சி யாண்டின் போது மீண்டும் அளந்து சரிபார்க்கப்பட்டு முன்பு இந்நிலங்களை உடையவர்களின் உரிமையையும் பழம் பெயரினையும் தவிர்த்துத் திருநள்ளாறுடையார்க்குத்தேவதானஇறையிலியாகஅளித்து வரி அதிகாரிகள் நிச்சயித்தபடி உள்வரி செலுத்துமாறு அரசன் திருநள்ளாற்றுக் கோயில் தேவகன்மி,மாகேசுரக் கண்காணி செய்வார்கள், ஸ்ரீகாரியஞ் செய்வான் ஆகியோர்க்கு ஆணையிட்டமையைத் தெரிவிக்கிறது.

குறிப்பு - இக்கல்வெட்டு குறிப்பிடும் அதிகாரிகள் மூன்றாம் குலோத்துங்கனின் பிற கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றனர். தாராசுரம் கல்வெட்டு கஆ *20 1908,*தெஇக தொகுதி *17* எண் *582,*தெஇக தொகுதி *5* எண் *989,*தெஇக தொகுதி *3* எண் *87,*தெஇகதொகுதி *23* எண் *306* ஆகியவற்றைக் காண்க.

திருநந்தவனங்கள் வாதுசெய்வாரணன், சிவன்மதி, திருநாவுக்கரைசன் என்ற பெயர்களில் அமைந்திருந்தன. வாதுசெய்வாரணன் திருஞானசம்பந்தரின் பட்டப் பெயர்.

வாசகம்

1. திருபுவனச் சக்கரவத்தி
கோனேரின்மை கொண்டான்
ஜெயங்கொண்ட சோழவள
நாட்டு முழையூர் நாட்டுத்
திருநள்ளாறுடையார்
கோயிலில் தேவர் கன்மிக்கும்
ம சீமாயேச்2வரக் கண்காணி
செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ்
செய்வானுக்கும் இத்தேவர்க்குத்
திருமடை விளாகமமும்
திருநந்தவனமும் உள்ளிட்டு
வேண்டுவனயிற்றுக்குத்
திருநள்ளாறான விருதராஜபயங்கரச்
சருப்பேதி மங்கலத்துப் பிடாகை
திருநள்ளாற்று நிலத்துச்
சாத்தசியர்க்குப் பதிநாறாவது
அளவில் நீங்கலாக நீக்கின ஊர்
நத்தத்துக்கு மேல் ஏற்றமாக ப...

2. ஊர் நத்தமாகத் செய்த
நிலத்து இத்தேவர் திருமடை
விளாகத்துக்குச் சேர்வான
நிலமும் கடலாடு திரு வீதியாகச்
செய்த நிலமும் வாதுசெய்
வாரணன் திருநந்தவனத்துக்கும்
சிவமதி திருநந்தவனத்துக்கும்
திருநாவுக்கரைசின்
திருநந்தவனத்துக்குச் சேர்வான
நிலமும் உள்பட நீர்நிலம்
இரண்டரையே மூன்று மாவும்
கொல்லை நிலம் இரண்டேய்
ஏழு மாவும் பதின்னாறாவது
அளக்கக் குறைந்த நிலத்
தோபாதி நிலம் மூன்று மா
முக்காணியும் ஆக நிலம் ஐஞ்சேய்
மூன்று மா முக்காணியும் ஐஞ்
சாவது முதல் இத்தேவர்க்குத்
தேவதான இறையிலியாக இட்டு
முன்னுடையாரும் பழம் பே

3. ரும் இறைகட்டுக் குடலாய்
வருகிறபடியும் தவிரந்து நீங்கலுக்கு
உடலாக நீக்கி வரியிலாரும்
வரிக்குக் கூறு செய்வார்களும்
எழுத்திட்ட உள்வரி தரச்
சொன்னோம் இன்னிலம் ஐஞ்
சாவது முதல் இத்தேவர்க்குத்
தேவதான இறையிலியாய்
நீங்கலுக்கு உடலாக கைக்
கொண்டு அனுபவிக்க எழுதினான்
திருமந்திர ஓலை இ..ாசிரியப்
பல்லவரையன் இவை வயிராக
ராயன் எழுத்து இவை விலாட
ராயன் எழுத்துயராள ரு 113
நீறீறீ உ உள் விரிப்படி ,யாண்டு
5 தேவதான இறையிலியாக
இட்டு நீங்கலாக நீக்கினபடிக்கு
உள்வரி ஜயங்கொண்ட சோழ
வளநாட்டு முழையூர் நாட்டுத்
திருநள்ளாறுஉடையாற்க்குத்
திருமடை விளாகமும்
திருநந்தவனமும் உள்

4. ளிட்டு வேண்டுவனவையிற்றுக்கு
முன்பு நீங்கலாய் வருகிற
நிலத்துக்கு மேல் ஏற்றமாகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநள்ளாறான விருதராஜபயங்கரச்
சருப்பேதி மங்கலத்துப்
பிடாகை திருநள்ளாற்று விடுகிற
நிலத்துக்கு ஊர்க் கணக்குத்
திருநள்ளாறுடையான் கணக்குப்படி
நிலமாய் முன்னுடையாரும் பழம்
பேரும் இறைகட்டுக் குடலாய்
வருகிறபடியுந் தவிர்ந்து யாண்டு
ஐஞ்சாவது முதல் தேவதான
இறையிலியாக இட்டு நீங்கலாக
நீக்கின உடையார் சுங்கந் தவிர்த்த
சோழ தேவர்க்கு பதினாறாவது
அளவில் நீங்கலாக நீக்கின ஊர்
நத்தத்துக்கு மேல் ஏற்றமாகப் பின்பு
ஊர் நத்தமாகச் செய்த நிலத்து
இத்தேவர் திருமடை விளாக

5. ச் சேர்வான நிலமும் திருக்
கடலாடு திரு வீதியாகச் செய்த
நிலமும் வாதுசெய் வாரணன்
திருநந்தவனத்துக்கும்சிவன்மதி
திருநந்தவனத்துக்கும்
திருநாவுக்கரைசன்
திருநந்தவனத்துக்கும் சேர்வான
நிலமும் உயவய இந் நிலம்
இரண்டரையே மூன்று மா
கொல்லை நிலம் இரண்டேய் ஏழு
மாவும் ஆக நிலம் ஐய் வேலிக்கு
பதின்னாறாவது அளக்கக் குறைந்த
நிலத் தோபாதி நிலம் மூன்று முக்
காணியும் ஆக நிலம் ஐஞ்சேய்
மூன்று மா முக் காணியினால்
நிலம் ஒபாதி பழவிறை ஙளயகளங
நிச்சயித்த ஒபாதி யசு ஙச க்குப்
பதினாறாவது அளந்தபடி நீங்கல்
நீக்கி நிலம் ஐவ்வேலிக்குப்
பத்தொன்பதாவது நிச்சயித்த
ஊஉயரு க்கு பட்டளந்த ஒபாதி
நீர் நிலத்துக்கு நிச்

6. சையித்த ஒபாதி நிலம் கொல்லை
நிலத்துக்குக் கொல்லை வரிசை
ஒபாதியும் ஊர் நிலத்துக்கும்
பழ இறை ஊஉயரு ...ரு
நிச்சயித்த ஙளருயஎ ....மும்
யாண்டு ஐஞ்சாவது முதல்
தேவதாந இறையிலியாக இட்டு
நீங்கலாக நீக்கினமைக்கு இவை
புரவரி சீகரணத்து முகவெட்டி
அருங்குன்ற நூழியான் எழுத்து
இவை புரவரி ஸ்ரீகரணத்து
முகவெட்டி ஆலங்குடையான்
எழுத்து கொற்றமங்கலமுடையான்
எழுத்து இவை புரவரி ஸ்ரீகரணத்து
முகவெட்டி புல்லாலி உடையான்
எழுத்து இவை புரவரி ஸ்ரீகரண
நாயகம் மருதூருடையான் எழுத்து
இவை புரவரி ஸ்ரீகரண....

7. மூலூருடையான் எழுத்து இவை
சிங்களராயன் எழுத்து இவை
நீலகங்கரையன் எழுத்து இவை
புரவரி ஸ்ரீகரணநாயகம் சிறு
பன்னூர் கிழவன் எழுத்து இவை
இராசராச விழுப்பரையன்
எழுத்து இவை நிகரிலி சோழப்
பல்லவரையன் எழுத்து இவை
பங்காளராயன் எழுத்து இவை
புரவரி ஸ்ரீகரண முகவெட்டி
நெல்குன்றங் கிழான் எழுத்து இவை
மழவராயன் எழுத்து இவை குருகுல
ராயன் எழுத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



Digitization Muthulakshmi Research Academy

28



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், மகாமண்டபம், வடக்குச்சுவர்

சோழர், மூன்றாம் குலோத்துங்கன், 9, கி.பி 18-5- 1187

ரிஷபம், பூர்வபக்ஷம், தசமி, உத்திரம், திங்கட் கிழமை

க.ஆ *451/1965-66*; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் *476*

செய்தி - கோயிலில் எண்ணெய் விடும் வாணியன் சோறன் ஆன நாடுடைய நாயக மாயிலட்டி என்பான் ..ம்ப குடையான் சான்று போனான் பக்கல் 120 காசு வாங்கிக் கொண்டு கோயிலில் மூன்று சந்தி வழிபாட்டின்போது விளக்கெரிக்கத் தேவையான எண்ணையை வழங்குவதாகக் கூறி அதற்கான உபையத் தீட்டு கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

குறிப்பு - இக்கல்வெட்டு குறிப்பிடும் அதிகாரிகள் மூன்றாம் குலோத்துங்கனின் பிற கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றனர். தாராசுரம் கல்வெட்டு க.ஆ *20 1908*, தெஇக தொகுதி *17* எண் *582*, தெஇக தொகுதி *5* எண் *989*, தெஇக தொகுதி *3* எண் *87*, தெஇகதொகுதி *23* எண் *306* ஆகியவற்றைக் காண்க.

திருநந்தவனங்கள் வாதுசெய்வாரணன், சிவன்மதி, திருநாவுக்கரைசன் என்ற பெயர்களில் அமைந்திருந்தன. வாதுசெய்வாரணன் திருஞானசம்பந்தரின் பட்டப் பெயர்.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன
சக்கரவத்திகள் மதுரை
கொண்டருளினகுலோத்துங்க சோழ
தேவற்க்கு யாண்டு 9 வது இஷப
நாயற்று பூர்வ பக்ஷத்.

2. தெசமியும் திங்கட் கிழமை
பெற்ற உத்திரத்து நாள் உய்யக்
கொண்டார் வள நாட்டு
முழையூர் நாட்டு உடையார்
திருநள்ளாறுடையார் கே

3. லில் இக்கோயிலில் எ...விடும்
வாணியன் சோறன் ஆன
நாடுடைய நாயக மாயிலட்டியேன்
இராஜேந்திர சோழ வள நாட்டு
ஆர்வலர் கூற்றத்து

4. மப குடையாந் சான்று போநான்
பக்கல் நாந் உபையத்தக்கு நான்
கைக்கொண்ட காசு 120 இக்காசு
நூற்று இருபதும்கைகொண்டுஇக்

5. ....கும் சந்தி மூன்றுக்கு எரியும் திரு
விளக்குக்கு விடு எண்ணைக்கு....
செவிடு ஆக ..

6. ...ன் வங்கயத்தா 40 அளக்க
கடவேனாக ஸம்மதித்து உபைய
தீட்டு குடுத்தேன் சோறன் நாடுடை
மாயிலட்டியேன் சோறன்

7. ஆன நாடுடை நாயக மாயிலட்டி
கைய்மாட்டைங்கா...இக்கோயிலில்
சிவப் பிராமணன் கூத்த பிரான்
ஆன தியாக சமுத்திர பட்டன்
எழுத்து இ

8. இப்படி அறிவேன் கோயிற் கணக்கு
திருநள்ளாறுடையாந் எழுத்து உ
இப்படி அறிவேன் ஸ்ரீகாரியம்
செல்லூருடையார் எழுத்து இப்படி
அறிவேன்

9. தேவகன்மி இரா‌ரா பட்டன் எழுத்து
இப்படி அறிவேன் சீமாகேசுர
கங்காணி சீகாழி பிள்ளை எழுத்து

Digitization Muthulakshmi Research Academy

29



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29 தர்ப்பாரண்யேச்வரர்கோயில், மகாமண்டபம், வடக்குச்சுவர், அடிப் பகுதி

சோழர்,மூன்றாம் குலோத்துங்கன், 17, **கி.பி** 13-02-1196

கும்பம், பூர்வ பக்ஷம், திதியை, உத்திரட்டாதி, திங்கட் கிழமை

கஆ *395/1902;* தெஇக எண் *1027;* புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண்477

குறிப்பு- கல்வெட்டு சிதைந்துள்ளது

செய்தி - கோயில் நிபந்தக்காரரில் ஒருவனான சோலை இடர் தீர்த்தானான முழையூர் நாட்டுக் கோன் என்பான் பத்து ஆடுகளைப் பெற்றுக் கொண்டு திருநள்ளாற்றுக் கோயிலில் சந்தி விளக்கு ஒன்றை எரிக்கத் தேவையான நெய்யை வழங்கச் சம்மதித்ததைத் தெரிவிக்கிறது.ஆடுகளை வழங்கியவர் பெயர் காணப்படவில்லை

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச்
சக்கரவத்திகள் மதுரை கொண்டு
பாண்டியன் முடித் தலையும்
கொண்டருளிய சீ குலோத்துங்க
சோழ தேவர்க்கு யாண்டு 17 ஆவது
கும்ப நாயற்று பூர்வ பத்திசத்து
திதியையும் திங்கட் கிழமையும்
பெற்ற உத்திரட்டாதி நாள்
உய்யக் கொண்டார் வள நாட்டு
முழையூர் நாட்டு உடையார்
திருநள்ளாறுடையார் கோயில்
மூல கிருத்...ஆதி சண்டேசுர தேவ
கன்மிகளுக்கு இ கோயில் நிமந்தக்க
ாறரில்சோலைஇடரதீற்தான்ஆனமு
ழையூர்நாட்டுகோநேந் .

2. சி விட்ட சொம்மலி ஆடு
10 இவ்வாடு பத்தும் நான்
கைக் கொண்டு சந்தி விளக்கு
ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு மளக்கு
நெய்யால் அளக்க கடவேனாகவும்
அளக்கும் மிடத்துவ் வாடு
பத்தும் இவையிற்...மேற்பட்ட
வற்த்தனைகளும் நானும் என்
வங்கிசத்தாரும் இது எரிவித்து
சந்திராதித்தவரை அளக்க
கடவோமானமைக்கு...



Public Domain. Digitization Muthulakshmi Research Academy

30 தர்ப்பாரண்யேச்வரர்கோயில்,சண்டிகேசுவரர் கோயில்,கிழக்கு,வடக்கு,மேற்குச் சுவர்கள்

சோழர்-மூன்றாம் இராசராசன், 25 +1, கி.பி 16-10-1241

துலா, சதயம், புதன் கிழமை

க.ஆ114/1968-6; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 479

கல்வெட்டு சிதைந்துள்ளது

செய்தி - கோயில் தானத்தாரும் மாஹேசுவரரும் நாட்டவரும் திருநள்ளாறுடையார் கோயில் நாடுடைநாயகன் திருமண்டபத்திலே கூடிப் பூசைக் காரியம் ஆராய்ந்த பொழுது கோயிலில் பணிபுரியும் சிவப் பிராமணர் பழைய நிவந்தத்திற்கான அரிசி,எண்ணெய் முதலானவற்றை அளிக்காதிருந்தமை கண்டு அதற்கான தண்டத்தை அவர்களிடமிருந்து பெற்று அதைக் கொண்டு நிலம் வாங்கி அந்நிலத்தால் வரும் வருவாயைக் கொண்டு முன் நிறுத்தப்பட்ட சடங்குகளை மீண்டும் நடத்தியமையைக் கூறுகிறது.

குறிப்பு- இதில் கையெழுத்திட்டிருப்போர் கோயிலில் பணி புரியும் சிவப் பிராமணர்,திருவீதி ஆண்டார்கள்,தேவரடியார்,ஸ்ரீபாதந் தாங்குவார்,தேவாரம் பாடுவோர்,கோயில் கணக்கர்கள் முதலானோர். கோயிலில் விளக் கெரிக்க நெய் மட்டுமன்றி எள் எண்ணை,மர எண்ணெய் (இலுப்பை) ஆகியனவும் பயன்படுத்தப் பட்டமை புலனாகிறது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்
சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ
தேவற்கு யாண்டு 25 வதின் எதிரா
மாண்டு துலா நாயற்று பூர்வ
பக்ஷத்து ...மியும் புதன் கிழமையும்
பெற்ற சதயத்து நாள் உய்யக்
கொண்டார் வள நாட்டு முழையூர்
நாட்டு உடையார் திருநள்ளாறுடை

2. யார் கோயில் நாடுடைநாயகன்
திருமண்டபத்திலே ஸ்ரீகோயில்
தானத்தாரும் மாஹேச்வரரும்
நாட்டவரும் இருக்க இக்கோயில்
பூசைக் காரியம் ஆராய்கிற இடத்து
சிவப் பிராமணர் உபையமாக
நாள் ஒன்றுக்கு அளந்து வருகிற
அரிசியும் அவலும்...

3. யாலும் எள் எண்ணை மர
எண்ணையும் அளந்து போதுகிற
இத்தாலே இவர்கள் தி....ணி
விற்பாரும் ஓடிப் போ.....கோயில்
மாணி தேவைப் படுகையாலும்
இவர்கள் அளந்து வரும் இவ்வ.....
படியிற் அளவாது தாழ்வுபட

4. போதுகையாலும் இவர்கள்
அளக்குமது தானும் நின்மாலி....
ங்கரியப்பட்டு போதுகையாலும்
இப்படி. ....ன தவிர நிச்சயித்து
நாயனார் நினைப்பி லிட்டருளி
பல கோயில்களும் தவிர்ந்து
போதுகையாலும் இக்கோயிலு....

5. சிவப் பிராமணர் அளந்து வரும்
உபயம் தவிரவும் இதுக் குடலாக
சிவப் பிராமணரை தண்டலாங்
காசு தண்டி நிலமாகக் கொண்டு
திருநாமத்துக் காணியுடனே கூட்டி
இதில் இறை மிகுதி யாவதுக்
குடலாக நிச்சயித்தமையில்
இதுக்குச்

6. சிவப் பிராமணரைத் தண்டின
காசிட்டு இந்நாயனார் தேவதானம்
திருநள்ளாற்று ...களில்
அவைவநல்லூருடையான் சேரமான்
பெருமான் பக்கல் விலை கொண்டு
திருநாமத்துக் காணியாக விட்ட
அச்சுதன் துண்டத்து பயிர் ரு றா
இந்நில

7. ம் அரையும் திருநாமத்துக்
காணியாகக் கூட்டி இறை மிகுதி
ஸ்ரீ பண்டாரத்திலே முதலாகவும்
சிவப் பிராமணர் உபையமாய்
நாள் ஒன்றுக்கு அளந்து வருகிற
அரிசி குறுணி அறு நாழியும் அவல்
நா நாழியும் பால் நாழியும் எள்
எண்ணை

8. நாழி உரியும் மர எண்ணை நாழி
உழக்காழாக்காக இரண்டரைச்
செவிடும் இந்நாள் முதல்
தவிர்ந்தமைக்கு இவை கோயிற்
கணக்கு திருநள்ளாறுடையான்
எழுத்தென்றும் இவை கோயிற்
கணக்கு புத்தகையூருடையான்
நாடுடைநாயக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy





Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. ப் பிரியன் எழுத்து என்றும் கோயிற் கணக்கு அம்பபுறத்துருடையான் சான்றுபோனா னெழுத்தென்றும் இவை தேவகன்மி குலோத்துங்க சோழ பட்ட னெழுத் தென்றும் இவை ஸ்ரீமாகேச்2வரக் கண்காணி திருஞானசம்பந்த னெழுத்தென்றும்

10. சைவாசாரியம் காலகால பண்டித னெழுத்தென்றும் நாடுடைநாயக பண்டித னெழுத்தென்றும் நாற்பத்தெண்ணாயிர பண்டித னெழுத்தென்றும் பூசை கண்காணி அமிர்தநாயக னெழுத்தென்றும் திருமடைபள்ளி கண்காணி திருத்தொண்டத் துகைய னெழுத்

11. தென்றும்திருக்கை கொட்டி அமுதுவரு வாழ்வித்தா னெழுத்தென்றும் ஸ்ரீபாதந் தாங்குவாற்குச் சாமதாயம் தில்லை நாயகப் பிச்ச னெழுத்தென்றும் சுப்பிரமண்ணியப் பிச்ச னெழுத்தென்றும் ருஞானசம்பந்தம் எழுத்தென்றும் திருவீதி ஆண்டார்களில் திருவீதி நாடு

12. டையான் எழுத்தென்றும் திருவீதியி...எழுத்தென்றும் திருஞானதம்பந்தர் எழுத்தென்றும்.... எழுத்தென்றும் திருப் பதியம் திருஞானசம்பந்தர் எழுத்தென்றும் தேவரடியார் உலகுடையார் நாவிலுறும் பெருமாள் மாணிக்கத்தின் எழுத்தென்

13. றும் நாடுடை நாயகம் எழுத்தென்றும் கும்பிட்டு இருக்கும் ஸ்ரீமாஹேச்2வரரில் ஸ்ரீகாரி....ழுத்தென்றும் சுப்பிரமண்ணிய...எழுத்தென்றும் திருநாவுக்கரசு ஆண்டார் எழுத்தென்றும்....எழுத்தென்றும் திருநாவுக்கரசு ஆண்டார் எழுத்தென்றும்....வேணும் பணி வல்லவர் எழுத்தென்றும் மதிகா .... ரெழுத்தென்றும்

14. அவ்வைநல்லூருடையான் சேரமான் பெருமாள் எழுத்தென்றும் சொக்கப் பெருமாள் எழுத்தென்றும் தொண்டற் கடியர் எழுத்தென்றும் பசுபதி தேவர் எழுத்தென்றும் நாடுடைநாயக வைராகி ஆண்டார் எழுத்

15. எழுத்தென்றும் கண்ணுடை நாயனார் எழுத்தென்றும் பெரும்பற்றப்புலியூர் எழுத்தென்றும் திருநள்ளாறான் விருதராச பயங்கரச் சருப்பேதி மங்கலத்து வரிப் புறத்து மாதேவ பட்ட னெழுத்தென்றும் செருப்பள்ளி உலோகநா..

16. னெழுத்தென்றும் நாரண நம்பி எழுத்தென்றும் திருநள்ளாறுடையா னெழுத்தென்றும் இழுக்கந்திறத்து பஞ்சநெதி வாண பட்ட னெழுத்தும் குரோவித் திருவையாறுடையா னெழுத்தென்றும்

17. ...னெழுத்தென்றும்....

18. ...எழுத்தென்றும்....

19. ....பிய ...

20. ...முடையான் நெல்வா...

21. ...னெழுத் தென்றும்....

22. ...ட்டான் தி ....

23. ...எழுத்தென்றும் ....கண்ண ......

24. ...எழுத்தென்றும் இவை எருமலுடையான் எழுத்தென்றும்....குடையான் கும்பி....

25. ...வெழுந்துருடையான் எழுத்தென்றும் ....

26. ...தாமரைக் கண்ண னெழுத்தென்றும்...

27. ...(சிதைந்துள்ளது)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், தியாகராஜ சுவாமி கோயில், தெற்குச் சுவர், அடிப் பகுதி

பிற்காலப் பல்லவர், வீரமோகனான காடவ ராயன், கி.பி 13ஆம் நூற்றாண்டு

கஆ 458/1965-6; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 480

செய்தி-வீரமோகன் காடவராயனின் மனைவி அழகிய நம்பிராட்டி செய்வித்த திருப்பணி பற்றியது. என்ன திருப்பணி என்பது கல்வெட்டில் குறிப்பிடப்படவில்லை. கல்வெட்டு சிறு கோயில் குமுதப் பட்டையில் காணப்படுதலால் இக்கோயிலை இவள் கட்டுவித்திருக்கலாம். அல்லது பழையதைத் திருத்திக் கட்டியிருக்கலாம்.

குறிப்பு : வீரமோகன், ஆட்கொல்லியார் காடவராயனின் மகன் ஏழிசைமோகனாக இருக்கலாம்.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரமோஹன்னான
   காடவ
2. ராயன் னழகிய நம்பிராட்டியேன்
   திருப்பணி

31

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

32 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், தியாகராஜ சுவாமி கோயில், மேற்குச் சுவர், அடிப் பகுதி

பிற்காலப் பல்லவர், வீரமோகன் காடவராயன், கி.பி 13ஆம் நூற்றாண்டு

கஆ *458/1965-6;* புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 480

கஆ *457/1965-66;* புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 481

குறிப்பு-கல்வெட்டு சுவருக்குள் மறைந்துள்ளது. எனவே இந்தியத் தொல்லியல் துறையினர் வெளியிட்ட வாசகமே இங்குத் தரப்பட்டுள்ளது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரமோகன் காடவராயன்
2. அழகிய நம்பிராட்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

33 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், தியாகராஜ சுவாமி கோயில்,மேற்கு, தெற்குச் சுவர்கள்

சோழர், மூன்றாம் இராசேந்திரன், 4, கி.பி 25-10-1249துலா, அபரபக்ஷம், துவிதிய, திங்கட்கிழமை, ரோகிணி

க.ஆ 455/1965-66; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 482

குறிப்பு - கல்வெட்டின் சில வரிகள் கட்டடத்துக்குள் மறைந்துள்ளன

செய்தி - திருவாரூர்க் கூற்றத்துத் தியங்குடையான் பொன்னாழ்வான் நச்சினார்க்கினியான் என்பான் திருநள்ளாற்று இறைவனுக்கு ஐப்பசி மாதம் திருப்பரணி நாளன்றும் சித்திரை மாதம் திருப்பரணி நாளன்றும் அமுது படைக்கக் கொடுத்த நிலத்தை நெல்வாய்ச்சேரி அனபாய மங்கலத்து ஊரார் இறையிலி செய்து கொடுத்தமை பற்றித் தெரிவிக்கிறது.

குறிப்பு - கல்வெட்டுஏடெதிரிட்டான் என்ற பெயரில்நந்தவனம்ஒன்றுஇருந்ததைக் குறிப்பிடுகிறது. ஏடெதிரிட்டான் என்பது திருஞானசம்பந்தரின் பட்டப் பெயர்களுள் ஒன்று. சமணரோடு புனல் வாதத்தில் ஈடுபட்ட போது இவரிட்ட ஏடு நீரை எதிர்த்து வந்ததால் இவர்க்கு இப்பெயர் ஏற்பட்டது. கல்வெட்டில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவராகக் காவியங்கண்ணி பங்கன் என்ற பெயர் கொண்ட ஒருவர் குறிப்பிடப் படுகிறார். சுந்தரமூர்த்தி நாயனார் திருநள்ளாற்று இறைவனைக் காவியங்கண்ணி பங்கன் என விளித்துப் பாடியுள்ளார். இப்பெயர் மக்கள் பெயராகவும் வழங்கியமை இக் கல்வெட்டால் தெளிவாகிறது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபு4வனச்
சக்ரவத்திகள் ஸ்ரீ ராஜேந்திர சோழ
தேவர்க்கு யாண்டு நாலாவது
துலா நாயற்று அபர பக்ஷத்து
த்3விதியையும் திங்கட் கிழமையும்
பெற்ற ரோசணி நாள் உய்யக் கொ

2. ண்டார் வள நாட்டு
முழையூர் நாட்டு உடையார்
திருநள்ளாறுடையார்
கோயில் ஆதிசண்டேச்2வர
தேவகன்மிகளுக்கு இந் நாட்டு
நெல்வாய்ச் சேரி அனபாய
மங்கலத்து ஊரவரோம் ஊர்க் கீழ்
இறை

3. யிலிப் பிரமாண இசைவு
தீட்டுக் குடுத்த பரிசாவது
கேய மாணிக்க வள நாட்டுத்
திருவாரூர்க் கூற்றத்துத்
தியங்குடையான் பொன்னாழ்வான்
நச்சினார்க்கினியான் இன்
னாயனார்க்கு ஐப்பசித் திருப்
பரணியும் சித்திரைத் திருப்
பரணியும் அமுது செய்தருள
அமுது படிக்கும் கறி அமுதுபடி

4. க்கும் இந் நாயனார்
ஏடெதிரிட்டான்
திருநந்தவனத்துக்கும்
நெல்வாய்க்குடி நிலத்துக்கு
மேற்கும் தென்பாற்கெல்லை
இடையாற் கிழான் வீதிவிடங்கப்
பெருமாள் நிலத்துக்கு வடக்கும்
மேல்பாற்கெல்லை சிந்தாமணி
வாய்க்காலுக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லை உட்சி...

5. வி செய்து குடுத்தோம்
இவ்வூர்களில் ஊரவரோம் இன்
னிலத்துக்கு நாங்கள் ஏற்றி இறுக்கு
மிடத்து இவ் வூர்களில் நில
விழுக்காட்டிலே ஏற்றி இறுக்க
கடவோமாகவும் இன் னாயனார்க்கு
சந்திராதித்தவரையும் திருநாமத்துக்
காணியும் இறையிலியுமாக
அனுபவிக்க கடவதாக.....

6. அரையன் சிற்றம்பலமுடையானான
அம்பர் நாட்டுக் கோ னெழுத்து
இந் நிலம் காலே காணி அரைக்
காணியும் திருப் படியில் நீர்
வார்த்துக் குடுத்தபடிக்கும்
இப்படிக்கும் இவை
தியங்குடையான் பொன்னாழ்வான்
நச்சினார்க்கினிய னெழு...

7. நேரி உடையான் குன்றுடைய
பெருமா னெழுத்து இப்படிக்கு
இவை நெல்வாய்ச் சேரி
உடையான் காவியங் கண்ணி
பங்க னெழுத்து இப்படிக்கு இவை
கீழ் மாந்தூருடையான் அரையன்
சேழகேரள தேவனான வில்லதரய
னெழுத்து இப்படிக்கு...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. படிக்கு இவை
வரம்பயலூருடையான்
எழுத்து இப்படிக்கு இவை
அயிற்காவுடையான் எழுத்து
இப்படிக்கு இவை அம்பருடையான்
இடங்கொண்டான் கைமாட்டாங்
கானமைக்கு இவை சிவப்
பிராமணன் தழுவக் குழைந்தான்
பட்டன் எழுத்து இப்படிக்கு இவை
பாற்குடையான் னாகதேவன்
கைமாட்ட.....

9. நல்லம்பருடையான் திருவாரூர்
ஆண்டானேன் இப்படி அறிவேன்
புலிவலமுடையான் திருநட்டப்
பெருமான் கண்ணுடை
னாயனேன் இப்படி அறிவேன்
தீராநிதியுடையான் பெற்றான்
அழகிய மணவாளப் பெருமா
னேன் இப்படி அறிவேன்
நல்லழுந்தூருடையான் அம்பர்
நாட்டுக்.....





In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், தியாகராஜசுவாமி கோயில், வடக்குச் சுவர்

பிற்காலப் பல்லவர், கோப்பெருஞ்சிங்கன், 11, கி.பி 7-03-1254

மீனம், பூர்வ பக்ஷம், பஞ்சதசி, உத்திரம், செவ்வாய்க் கிழமை

கஆ 456/1965-66; புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 483

கல்வெட்டு சிதைந்துள்ளது

செய்தி - நென்மலியுடையான் தேவன் செல்வாண்டான் என்பான் தன் உடம்பு நன்றாகத் தன் பெயரால் கோயிலில் செய்யப்படும் வழிபாடுகளுக்கும் நந்தவனம் வளர்த்து மாலைகள் தொடுப்பதோடு தெங்கு,பலா,மா,வாழை உள்ளிட்ட மரங்களையும் வளர்த்து வருகிற திருத்தொண்டர் கூழுர் உடையார் ஈசான தேவர்க்கும் அவர் திருத் தொண்டர்க்கும் சீவனத்துக்காக நிலம் வாங்கித் தானமாக வழங்கிய செய்தி குறிப்பிடப்படுகிறது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவனச்
சக்கரவத்திகள் ஸ்ரீ அவனியாளப்
பிறந்தான் கோப்பெரு.....வர்க்கு
யாண்டு 11 ஆவது மீன நாயற்றுப்
பூர்வ பக்ஷத்துப் பஞ்சத4சியும்
செவ்வாய்க் கிழமையும் பெற்ற

2. உத்திரத்து நாள் உய்யக்
கொண்டார் வள நாட்டு
முழையூர் நாட்டு உடையார்
திருநள்ளா....விருதராயபயங்கர
வள நாட்டு மேற்கால் நாட்டு
எருக்கத்தம்புலியீரான இராசேந்திர
சோழ புரத்து நென்மலி

3. யுடையான் தேவன்
செல்வாண்டான் தனக்கு நன்றாகத்
தன் பேரால் செய்கிற ....தவனமுச்
செய்ய உய்யக் கொண்டார் வள
நாட்டுப் புத்தக்குடியில் கொண்டு
விட்ட நத்தத்து ஆட்டைத் திரு
நாளில்

4. ஆசாந் திருப் பவனியும் தீர்த்தத்
திருநாளும் ஏறி யருளச் செய்த திரு
மண்டபம் நீக்கி நீக்கி உள்ள .....
திருப் பள்ளித் தாமமும் தெங்கு
பலா உள்ளிட்ட மரங்களு
மாக்குகிற திருத் தொண்டர்
கூழுருடையார் ஈசான தேவற்

5. கும் இவர் சந்தானத்துத் திருத்
தொண்டர்களுக்கும் ஜீவனத்துக்
குடலாக கொண்டு ....ரமத்தால்
இந்தச் செல்வாண்டான் ப்ரயாகைத்
திருவிடை மருதுடையான் பட்டன்
பக்கல் விலைகொண்

6. டு வெண்காடு தேவன் இருப்பு
ரு வபச ம் பாடகத்து மாதேவ
பட்டன் பக்கல் ...ம் பாடகத்துத்
திருநள்ளாறுடையான் பட்டன்
பக்கலும் காச்2யபன் குலோத்துங்க
சோழ பட்டன் பக்கலும் விலை
கொ

7. ண்ட ச ம் ராயங்குடையான்
இருப்பு ஊற்றுக் கேணியும்
கடிப...இவன் பக்கலுக்கு ....யான்
பக்கல் விலை கொண்ட சுவர் அடி
ரு உயம் ஆக ரு இந்நிலம் ஒன்றே
அரைமாவ

8. ரைக் காணி முந்திரிகையும்
ஊர் மாவிந்த கடமை குடிமை
இறுத்து....இத் தேவற்குப் பின்பும்
இவர் சந்தானத்தில் உள்ளார்
இத் திருநந்தவனஞ் செய்து இந்
நிலம் காணியாக அனுபவிக்கக்
கடவர்களாக இந் ...

9. நென்மலியுடையான் தேவன்
செல்வாண்டான் .....வேண்டு ....
ப்பிக்கக் கட.....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy







Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35 தர்ப்பாரண்யேச்வரர்கோயில்,ராஜ மண்டபம்,தெற்குச்சுவர்

பாண்டியர்,சடையவர்மன் ஸ்ரீவல்லபன்,3, கி.பி 1311

புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 484

செய்தி - சுந்தரபாண்டியப் 2 ரஹ்மாராயர்எனும் பாண்டிய மன்னனின் படைத் தலைவர் எழுந்தருளப் பண்ணின அபிமுக்தேசுவரர் கோயிலில் நாடுடைநாயகப் பேரிளமையார் எனும் வேளாண் வகுப்பினர் திருஞான சம்பந்தர் திருவுருவத்தையும் கோயிலில் நடைபெறும் எல்லாத் திருநாள்களின் போதும் எழுந்தருளப் பண்ணுவோமெனச் சமய பண்டாரத்தார்க்கு உறுதி அளித்தமையைத் தெரிவிக்கிறது.

குறிப்பு- பாண்டியன் சடையவர்மன் ஸ்ரீவல்லபனுக்கு, ஆகவராமன்,வாள் வாசி காட்டினான் என்னும் பட்டங்கள் உண்டு. இவன் பெயரால் ஆகவராமன் பணம் என ஒரு காசு வழக்கிலிருந்ததைத் திருநள்ளாற்றுக் கோயிலில் உள்ள விருப்பண்ண உடையார் கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சட பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ஸ்ரீவல்ல தேவர்க்கு யாண்டு மூன்றாவது தை மாதத்துப்... நாள் சமைய பண்டாரத்தார்க்கு திருநள்ளாற்று
2. நாடுடைய நாயகப் பேரிளமையாரோம் தீட்டுக் குடுத்த பரிசாவது இவ்வூரில் பிள்ளை சுந்தர பாண்டிய ப்3ரஹ்மாராயர் எழுந்தருளப் பண்ணின நாயனார்
3. அபி4முக்த நாயனார் கோயிலில் நாயனார் சம்பந்தப் பெருமாள் நாயநாரை இந்நாள் முதல் பெருமாள் திருவுலாச் செய்யும் திருநாளும் திங்கள் திருநாளும் எழுந்தருளும்
4. திருநாள் இத்தனையும் நாயனார் சம்பந்தப் பெருமாள் நாயனாரையும் திருநாள் விடாமல் கூட எழுந்தருளப் பண்ணக் கடவோமாகவும் எழுந்தருளுவிக்கும் இட
5. த்து ஸ்ரீபாதன் தாங்கும் பேர் எட்டும் பண் எடுக்கப் பேர் இரண்டும் ஆகப் பேர்ப் பத்தும் திரு விளக்கு ஆளும் தாழ்வற இட்டு எழுந்தருளப் பண்ணக் கடவோ
6. மாகவும் இப்படிக்கு சந்திராதித்தவரையும் செல்ல எழுந்தருளப் பண்ணக் கடவோமாகவும் இப்படிக்கு இத் தீட்டே சாதனமாகக் கொ
7. ண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் இப்படிக்கு சம்மதித்து தீட்டுக் குடுத்தோம் சமைய பண்டாரத்தார்க்கு நாடுடை நா
8. யகப் பேரிளமையாரோம் உ இவை நாடுடை நாயக வேளான் எழுத்து உ பல்கால் நடந்த வேளான் எழுத்து உ சான்றுபோன வேளான் எழுத்து உ போக மாத்த
9. பூந்முலை வேளான் எழுத்து காவியங் கண்ணி வேளான் எழுத்து உ நாவிலூரும் பெருமாள் வேளான் எழுத்து உ நாற்பத்தெண்ணாயிர வேளான் எழுத்து உ
10. வளையம் மழகிய பெருமாள் வேளான் எழுத்து உ மாராய மங்கலமுடையான் எழுத்து உ கொற்ற மங்கலமுடையான் எழுத்து உ ஆனைக்குடையான் எழுத்து கப்ப
11. லுடையான் எழுத்து உ நெற்குப்பையுடையான் எழுத்து உ நென்மலியுடையான் எழுத்து உ .மாஹேச்2வர வேளான் எழுத்து உ தண்டலங் கிழவன் எழுத்து
12. சண்டேசுர வேளான் எழுத்து உ நென்மலியுடையான் கந்தன் எழுத்து குமார மங்கலமுடையான் எழுத்து செம்பங்குடையான் எழுத்து
13. அரைசுடையான் எழுத்துஉ ஆற்றூருடையான் எழுத்து உ பிறையாறு கிழவன் எழுத்து குறுக்கை யுடையான் வேளான் எழுத்து

Digitization Muthulakshmi Research Academy

36



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

36 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், முன்மண்டபம், வடக்குச்சுவர் (கொடி மரத்துக்கு வலது புறம்)

பாண்டியர், சடையவர்மன் ஸ்ரீ வல்லபன், 4, கி.பி1312

புதிதாகக் கண்டறியப்பட்டது

(கல்வெட்டில் அரசன் பெயர் இல்லை. மாறாகக் கோனேரின்மை கொண்டான் என்ற ஒரு பட்டப் பெயர் மட்டும் தரப்பட்டுள்ளது. இப்பட்டப் பெயரைப் பாண்டியர்களும் சோழர்களும் பயன்படுத்தி உள்ளனர். எனினும் இதில் வரும் பராந்தகச்சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர்ப் பெயரடிப்படையிலும் கல்வெட்டின் இறுதியில் கையெழுத் திட்டிருக்கும் தொண்டைமான் என்ற அதிகாரி அடிப்படையிலும் இக்கல்வெட்டு சோழர் கல்வெட்டெனக் கொள்ளப்பட்டுள்ளது)

செய்தி - மூன்றாம் இராசராசனின் குருநாதர், பெருமாள் சிதம்பர ஸ்ரீமயதேவர் பராந்தகச்சதுர்வேதிமங்கலத்தில் எழுந்தருளிஇருக்க மூன்றாம் இராசராசன் கார்த்திகைமாதம் முதல்தேதியன்று சூரியகிரகணத்துக்குப் பிராயச்சித்தத்திற்கு முதலாகத் திருநள்ளாறுடையார் கோயிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்குத் திருநள்ளாற்றில் உள்ள ஓர் எண்ணெய்ச் செக்கிலிருந்து வரும் வரியைக் கொடுத்தோம் என வாய்மொழியாகக் கட்டளையிட்டமை குறிப்பிடப்படுகிறது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீபெருமாள்சிதம்பரஸ்ரீமய
தேவர்ஸ்ரீபராந்தகச்சதுர்வேதிமங்க
லத்து எழுந்தருளிஇருக்கநால(ரவது)

2. கார்த்திகைமாஸம்முதல்தியதி
ஸூர்யக்3ரஹணத்துக்குப்ராய
ச்2சித்தத்துக்கு உடலாகஉத3க
பூர்வமாகப்ரஸாதம்செய்த

3. ருளினதிருமுகப்படிச்ரிபு4
வனச்சக்ரவத்திகோனேரின்
மை கொண்டான் உடையார்
திருநள்ளாறுடையார்கோயி(ல்)

4. தானத்தாற்க்குதங்களூரில்ஒருசெக்
கால்உள்ளஆயம்இன்னாயனாற்க்கு
திரிநுந்தாவிளக்குக்குநாலாவது

5. (அ)ற்பசிமாஸ முதல்குடுத்தோம்
இப்படிக்கு இவ்வோலையே
பிடிபாடாகக் கொண்டு
சந்த்3ராதி3த் (தவ)

6. ரையும்திரிநுந்தா
விளக்கு எரிப்பதாக
இறையிலியாக கல்லிலும்
செம்பிலும்வெட்டிக்கொள்கஉ

7. யாண்டு நாலாவதுநாள்
121 னால்தொண்டைமான்
எழுத்தால்ப்ரஸாத3ம்
செய்தருளினதிருமுகம்திரு

8. வெழுத்துச்சாத்திஅருளித்துஉ

Research Academy

37



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

37 தர்ப்பாரண்யேச்வரர்கோயில், முன்மண்டபம், வடக்குச்சுவர் (கொடிமரத்துக்குவலதுபுறம்)

பாண்டியர், சடையவர்மன் ஸ்ரீ வல்லபன், 14, **கி.பி** 1322

புதிதாகக் கண்டறியப்பட்டது

மேலே உள்ள கல்வெட்டோடு சேர்த்தே இக்கல்வெட்டும் வெட்டப் பட்டிருப்பதாலும் அருளிச் செயல் என்ற குறிப்பாலும் வாணாதராயன் என்ற அதிகாரிக்குறிப்பாலும் இக்கல்வெட்டும் மூன்றாம் இராசராசனைச் சேர்ந்ததாகக் கொள்ளப்பட்டுள்ளது.

செய்தி : திருஞானசம்பந்தன் திருவோடை என்ற பெயரில் நிலம் வழங்கியதைக் கொண்டு பயிர் செய்து கொள்க எனத்திருநள்ளாறு கோயில் தானத்தார்க்கு அரசன் ஆணையிட்டமை குறிப்பிடப்படுகிறது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீஅருளிச்செயல்உடையார்
திருநள்ளாறுடையார்கோயி(ல்)
2. தானத்தாற்க்கு
திருநள்ளாறுதிருஞ(ா)னசம்பந்தன்
திருவோடையாய் தங்களுக்கு
விட்டகுழிபதினாலாவ(து)
3. மாசிமாஸ முதல் பற்றிப்
பயிற்செய்து கொள்கஉ
இவைவாணாதராயன்எழுத்து உ

38 தர்ப்பாரண்யேச்வரர்கோயில், கொடிக் கம்பத்திற்கு முன்,மகாமண்டபத்தின் வலது பக்கச் சுவர்

பாண்டியர், சடையவர்மன் மூன்றாம் சுந்தரபாண்டியன், 13 + 1, 1318

புதிதாகக் கண்டறியப் பட்டது

செய்தி - அரசன் தன் பிறந்த நாளான பூசத்தன்று தன் பட்டப் பெயரான கோதண்டராமன் என்னும் பெயரில் கோதண்டராமன் சந்தி என்ற புரட்டாசித் திருநாளுக்கும் கோயில் திருப்பணிகள் பலவற்றிற்கும்செலவு செய்வதற்கான முதலாகத் திருநள்ளாற்றில் இருபத்து நான்கு வேலி நிலமும்,கண்ணங்குடி எனும் ஊரில் எட்டு வேலி நிலமும் குத்தமங்கலம் எனும் ஊரில் இரண்டரை வேலி நிலமும் நெடுங்காடு எனும் ஊரில் மூன்றரை வேலி நிலமும்என மொத்தம் நாற்பது வேலி நிலத்தையும் கி.பி 1318 ஆம் ஆண்டுத் தை மாதம் முதல் இந்நிலத்திற்கான பல்வேறு வரிகளையும் விலக்கித் தேவதான இறையிலி யாகத் தந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் உய்யக் கொ(ண்டார்) வள நாட்டு
2. ....கூறு திருநள்ளாறு உடையார் திருநள்ளாறுடைய நாயனார் கோயில் தானத்தார்...
3. நம் பேரால் கட்டின கோதண்டராமன் சந்திக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிவந்தங்
4. களுக்கும் நாம் பிறந்த நாள் பூசம் தீத்தமாகக் கட்டின புரட்டாதித் திருநாளுக்கு திருநாள் செலவுக்கும் இ
5. க் கோயில் பல திருப்பணிக்கும் உடலாக இன் னாயனார் திருநாமத்துக் காணியாய் இறுத்துப் போதுகிற ஆ
6. ஆக நிலம் இருபத்தறு வேலியும் கண்ணங்குடி நிலம் எண் வேலியும் குத்த மங்கலம் நிலம் ந
7. லம் இரண்டறையும் நெடுங்காடு நிலம் மூன்றரையும் ஆக நிலம் நாற்பதிற்று வேலியு
8. பதின்மூன்றாவது எதிராமாண்டு தைம் மாத முதல் தேவதான இறையிலியாக தந்தது இன்னிலத்தால்
9. வருங் கடமை அந்தராயம் காரிய ஆராட்சி நெல்வரி பொன்வரி காசு கடமை மாவடை புன்பயிர்
10. தறி இறை செக்கிறை தட்டொலி பாட்டம்,ஏர் வரி இனவரி இடை வரி மனை வரி ஏரிப்
11. பாட்டம் காணிக்கை கார்த்திகைப் பச்சை மஞ்ச மலி ஓலை எழுத்து வினிபோகம் வாசல் பேறு இ
12. லாஞ்சனப் பேறு வெட்டி நீரணி ஆள்த்தரம் உதைச்சத் தாழ்வு ஆனைச் சாலைத் திரைப் பந்தி தரிகை ஆயம் உள்ளி
13. ட்ட மற்றும் எப்பேற்பட்ட இறைகளும் தேவைகளும் இன்னாள் முதல் வரியிலார் கணக்கிலும் கழித்து
14. திருநள்ளாற்றில் ஆய வற்கமுள்ளதும் இன்னாயனார்க்குச் சாத்துபடிக் குடலாக கொ... சொன்னோம் இப்படிக்கு இவ்
15. வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரையும் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொ
16. ண்டு இன்னிலம்களும் பசானமும் வம்பும் கடைப் பூவும் மஞ் சள் இஞ்சி வாழை கமுகு கொழுந்து உள்ளிட்ட
17. மற்றும் எப்பேர்ப்பட்ட பயிர்களும் செய்து கொண்டு முதலடங்கல் இறையிலியாக அனுபவித்து
18. போதவும் பாற்க இவை இளான்குடி உடையான் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

38



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39 தர்ப்பாரண்யேச்வரர் கோயில், ராஜமண்டபம், வடக்குச் சுவர்

பாண்டியர், சடையவர்மன் மூன்றாம் சுந்தரபாண்டியன், 13 + 1, 1318

புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள் எண் 501

செய்தி : கோயிலைச் சுற்றி நந்தவனம் அமைக்க நிலத்தை வரியில்லாமல் செய்து கொடுத்ததைத் தெரிவிக்கிறது

வாசகம்

1. ....நிலத்திலே இவர்களுக்கு இறையிலியாக விட்ட நிலம் இரு வேலியும் இன்னாயனார்க்கு திருச் சுற்றில் இவர் செய்விக்கிற திருநந்தவனத்துக்கு .....

2. ....பதின்மூன்றாவது எதிராவது தைம்மாத முதல் தேவதான இறையிலியாக குடுத்தோம் இன்னிலத்தால் வரும் கடமையும் அந்தராயம்.....

3. ....நெல்வரி பொன்வரி காசு கடமை....

4. ....இறைகளும் தேவைகளும் வரியிலார் கணக்கிலும் கழித்து ...இவ்வோலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்தவரையும் இந்.....

5. ....கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கெ(ா)ள்ளவும் இந்நிலம் காரும் மானமும் வம்பும் கடைப்பூவும் மஞ்சள் இஞ்சி வா

6. ழை கமுகு கொழுந்து மற்றும் எப்பேர்பட்ட பயிர் செய்து கொண்டு இன்னாள் முதல் மு.ட்டடங்க இறையிலியாக அனு....

7. வித்துபோதவும் பாற்க யாண்டு 13 வது எதிராமாண்டு நாள் 182 இழை இளாயாகுடி உடையான்...

8. ....எழுத்து உ. இவை காலிங்கராயன் எழுத்து உ. ஸ்ரீ ....நாயநார் கோயில் தானத்தார்க்கு இன் னாயனார் ....காணி உடைய வன்னியர்....பெருமானுக்கும் நாச்சியார் போகமார்

3. ....க்கு குத்தமங்கலத்து இன் னாயனார் திரு.....

4. சியான் நிலத்திலே இவர்களுக்கு இறையிலியாக விட்ட நிலம் இரு வேலியும் இன் னாயனார்க்குதிருச் சுற்றில்இவர்செய்விக்கிறதிருநந்தவ னத்துக்கு

5. ... நிலம் இரு வேலியும் ஆக ரு ங வி இன்னிலம் மூவேலியும் பதின்மூன்னாவதுஎதிராவது தைம்மாதமுதல்தேவதான இறை

6. யிலியாக குடுத்தோம் இன்னிலத்தால் வரும் கடமையும் அந்தராயம் காரிய ஆராட்ச்சி நெல் வரி பொன் வரி காடு கடமை ...எற்பேர்ப்பட்ட

7. இறைகளும் தேவைகளும் வரியிலார் கணக்கிலும் கழித்து இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரையும் செல்வ

8. தாககல்லிலும்செம்பிலும்வெட்டி க்கொள்ளவும்இன்னிலம்காரும்பிச ானமும்வம்பும் கடைப்பூவும்மஞ் சளும்இஞ்சி வா

